'நானும் என் வீட்டாரும் ஆண்டவருக்கே ஊழியம் செய்வோம்' (யோசு 24:15)

நற்செய்திப் பணியாளர்

(சிவகங்கை மறைமாவட்ட தன்னார்வ நற்செய்திப் பணியாளர்களின் மாதச் செய்தி மடல்)

அருள் : XVII நவம்பர் கி.பி. 2026 சான்று : 203



அவரோடு இறப்போம் உயிர்ப்போம்


புதிய பணியாளர்கள் பயிற்சி
அறந்தாங்கி
எருக்கூர்
திருகோகர்ணம்
அண்ணாநகர்-தஞ்சாவூர்
மணல்மேடு
மாந்தை
நாகப்பட்டணம்
மணல்மேல்குடி
மன்னார்குடி
தஞ்சாவூர் பேராலயம்
மயிலாடுதுறை
தரங்கம்பாடி
காளையார்கோவில்
சீர்காழி
சாயல்குடி
ராஜகோபாலபுரம்
அமைதியகம்
புதுக்கோட்டை

பாசத்திற்குரிய உடனுழைக்கும் நற்செய்திப் பணிக் குடும்பமே,

நற்செய்திப் பணிக்காக அர்ப்பணித்த எவரும், 'இம்மையில் நூறு மடங்காக வீடுகளையும், சகோதரர்களையும், சகோதரிகளையும், தாயையும், நில புலன்களையும் இவற்றோடு கூட இன்னல்களையும், மறுமையில் நிலை வாழ்வையும் பெறாமல் போகார்' (மாற் 10:30) என்று நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்து மிகத் தெளிவாக கூறியிருக்கிறார். மேலே சொல்லப்பட்ட அனைத்து ஆசிகளையும், உண்மையிலேயே தன்னை அர்ப்பணித்த அனைவரும் பெற்றுக்கொள்ளச் செபிக்கிறேன், வாழ்த்துகிறேன். புதிதாக அர்ப்பணம் ஏற்ற 62 உறவுகளை சிவகங்கை மறைமாவட்ட தன்னார்வ நற்செய்திப் பணிக் குடும்பத்தின் சார்பாக நெஞ்சத்தின் ஆழத்திலிருந்து வரவேற்கிறேன், வாழ்த்துகிறேன், செபிக்கிறேன்.

கடந்த கிபி 2026 மே மாதம் முதல் 'அர்ப்பணிப்பு' என்ற தலைப்பில் தொடர்ந்து தலையங்கச் செய்திகளை எழுத கடவுள் அருள் கூர்ந்தார். சீராய்வு தியானத்திலே நாம் அனைவரும் மறு அர்ப்பணம் செய்ய வேண்டி இருந்ததால் மிக மிகச் சுருக்கமாக அர்ப்பணிப்பு என்றால் என்ன? திருவிவிலிய மாந்தர்களில் ஒரு சிலரின் அர்ப்பணிப்பு (ஆபிரகாம், அன்னை மரியாள், பேதுரு, அந்திரேயா, பவுல்), அர்ப்பணிப்பில் நிலைத்திருக்கச் செய்ய வேண்டியவைகள் பற்றித் தியானித்தோம். இந்த இதழில் அர்ப்பணிப்பில் தோன்றும் ஆசிகளைப் பற்றிச் சுருக்கமாக காண்போம்.

குலமுதுவர் ஆபிரகாம்: பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த ஆபிரகாம் இன்றுவரை நம்பிக்கையாளர்களின் தந்தை (விசுவாசிகளின் தந்தை) என்று அழைக்கப்படுகிறார். தனது 90 வயது வரை குழந்தை இல்லாமலிருந்தவர். பெரிய இனமாகி வானத்தின் விண்மீன்களைப் போலவும் கடற்கரை மணலைப் போலவும் பெருகினார். இறை வார்த்தையின்படி (மத் 6:33) இவ்வுலக செல்வங்களையும் ஏராளமாக தாராளமாக பெற்றிருந்தார். எல்லாவற்றுக்கும் மேலாகக் கடவுளுக்கு மிகவும் நெருக்கமானவராக இருந்தார்.

புனித அன்னை மரியா: உலக மீட்பரின் தாய், கடவுளின் தாய் என்ற பெரும் பேற்றிற்கு உரிமையாளரானார். உலகில் உள்ள அனைத்துப் பெண்களுக்கும் மேலாக உயர்த்தப்பட்டார்(லூக் 11:27, லூக் 1:48)பெண்களுக்குள் ஆசி பெற்றவராகத் திகழ்கிறார். அனைத்து மக்களின் மேலான வணக்கத்திற்கு உரியவராயிருக்கிறார். அவரது அர்ப்பணிப்பின் ஆசிகளை எழுதத் தொடங்கினால் நாளும் தாளும் போதாது.

புனித பேதுரு: யாருமே நினைத்துப் பார்க்க முடியாத, பெற்றுக்கொள்ளாத மாபெரும் ஆசியை நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவிடமிருந்து பெறுவதை காண்கிறோம்.' உன் பெயர் பேதுரு. இந்தப் பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன். பாதாளத்தின் வாயில்கள் அதன் மேல் வெற்றி கொள்ளா. விண்ணகத் திறவுகோல்களை நான் உன்னிடம் தருவேன். மண்ணுலகில் நீ அனுமதிப்பது விண்ணுலகிலும் அனுமதிக்கப்படும். என்று இயேசு ஆண்டவர் பிரகடனப்படுத்துகிறார் .புனித பேதுருவை உயர்த்துகிறார். எவ்வளவு பெரிய ஆசி பார்த்தீர்களா? அர்ப்பணிப்பின் மேன்மை எவ்வளவு உயர்ந்தது அல்லவா?

புனித பவுல்: புதிய ஏற்பாட்டில் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவுக்கு அடுத்து போற்றப்படுகிறவர் புனித பவுல் தான். இவர் எழுதிய 13 திருமடல்கள் நமது ஆவிக்குரிய வளர்ச்சியில் எத்துணை சிறந்த பங்களிப்புச் செய்கின்றன என்பதை நாம் மிகத் தெளிவாக அறிந்து இருக்கிறோம். நமது வெற்றியுள்ள கிறிஸ்தவ வாழ்க்கைக்கு, சீடத்துவ வாழ்விற்கு இவரது அறிவுரைகளும், அனைத்திற்கும் மேலாக அவரது முன் மாதிரியும் பெரிதும் துணைபுரிந்து வருவதைத் தினமும் நம் அனுபவத்தில் உணர்கிறோம். அர்ப்பணிப்பினால் விவிலியம் மாந்தர்கள் பெற்ற ஆசிகளில் ஒரு சிலவற்றைப் பற்றி மட்டுமே எழுதி இருக்கிறேன். அர்ப்பணிப்பின் மூலம் எண்ணற்ற ஆசிகளை பெறுகிறோம் என்பது அசைக்க முடியாத நம்பிக்கை மட்டுமல்ல அவை நம் தினசரி அனுபவங்கள். மேற்கண்ட ஒரு சிலரின் அர்ப்பணிப்பிற்கு அடித்தளம் அமைத்த, அசைக்க முடியாத நம்பிக்கை (விசுவாசம்) கீழ்ப் படிதல், வெறுமையாக்குதல் போன்ற

பண்புகள் நம்மிடமும் காணப்பட்டால், நாமும் நம்மை முழுமையாக கடவுளுக்கு அர்ப்பணிக்க முடியும். அர்ப்பணிப்பின் ஆசிகளை நிறைவாகப் பெற முடியும்.

நிறைவான, முழுமையான அர்ப்பணிப்பிற்கு ஓர் உன்னதமான எடுத்துக்காட்டு நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவே என்பதை நினைவில் கொள்வோமானால் கடவுளுக்கு நம்மை அர்ப்பணிப்பது எளிதான காரியமே. நாம் தினசரி பிலி 2:6-11- இல் அறிவிக்கப்பட்ட திருவிவிலியப் பகுதியை தியானித்தால் அர்ப்பணிப்பு சுலபமாகிவிடும். நமது ஆண்டவரோடு சேர்ந்து என் விருப்பம் அல்ல உமது திருவுளத்தின் படியே நடக்கட்டும் என்று சொல்லத் தூய ஆவியானவரால் தூண்டப்படுவோமானால், நாம் எல்லாவற்றிற்கும் ஆசி பெற்றவராய் விளங்குவோம். நற்செய்திப் பணியாளராக அர்ப்பணிப்பது என்பது இயேசு கிறிஸ்து ஆண்டவரின் அன்பை ஏற்று, அவருடைய வார்த்தைகளை மக்களிடம் அறிவித்து, மக்களை இறைவனிடம் அழைத்துச் செல்லும் உன்னத அழைப்பாகும். அர்ப்பணம் என்பது நம் வாழ்வு ,நேரம், திறமை, பொருள் அனைத்தையும் இழப்பதாகும். அதற்கு தகுந்த பலன் கிடைக்காமல் போகுமா?

1. இயேசு கிறிஸ்து ஆண்டவரின் இறுதிக் கட்டளைகளை (மத் 28:19) நிறைவேற்றி அவரின் திருப்பணியில் பங்கேற்பதன் மூலமாக நமது வாழ்க்கை இறைவனின் திட்டத்திற்குப் பயன்படுகிறது என்ற ஆழமான பொருளைப் பெறுகிறோம்.
2. இறைவனோடு நெருங்கிய உறவு (யோவா 15:4) வளர்கிறது. அவரது திருவுளத்தை நிறைவேற்றுவதன் மூலம் ஆன்மீக முதிர்ச்சி அடைகிறோம்.
3. பிறருடைய வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்தும் பேறு (உரோ 10:17) கிடைப்பதால் பிறரின் வாழ்வில் இறைவனின் அன்பு செயல்படுவதற்குக் கருவியாக இருக்க முடிகிறது.
4. விண்ணகத்தில் மகிழ்ச்சி உண்டாக (லூக் 15:7) கருவியாகச் செயல்படுவதால், ஒருவர் மனம் மாறி இறைவனிடம் வருவதால் தனிப்பட்ட புகழை காட்டிலும் ஒருவரின் ஆன்மீக நலனில் மகிழ்ச்சி காணக் கற்றுக் கொள்கிறோம்.
5. தன்னலமற்ற அன்பில் (திப 20:35) நமது நேரம், உழைப்பு, திறமை ஆகியவற்றைப் பிறருக்காகப் பயன்படுத்தக் கற்றுக் கொள்கிறோம். அதனால் பிறருடைய துன்பங்களைப் புரிந்து கொள்ளும் மனமும் அறிவும் வளர்கின்றன.
6. அசைக்க முடியாத நம்பிக்கையிலும் துணிச்சலிலும் (2 தீமோ 1:7) உறுதிப்படுகிறோம். நற்செய்தி அறிவிப்புப் பணியில் வரும் எதிர்ப்பு, அவமதிப்பு, சோர்வு போன்றவற்றின் நடுவிலும் கடவுளை நம்பி முன்னேறக் கற்றுக் கொள்கிறோம். பொறுமை, மன உறுதி, துணிவு, தாழ்மை ஆகிய நற்பண்புகள் வளர்கின்றன.
7. தூய ஆவியானவரின் வழிநடத்துதலை அனுபவித்து அவரது வல்லமையால் சாட்சியாக (திப 1:8) வாழ்கிறோம். நற்செய்தி அறிவிப்புப் பணி, மனித அறிவையும் திறமையும் சார்ந்ததல்ல, கடவுளின் அருளையும் தூய ஆவியானவரின் வழிநடத்துதலையும் சார்ந்தது என்பதை உணர்ந்து கொள்கிறோம்.
8. விண்ணகத்தில் நிலையான கைம்மாறு(1 கொரி 15:58)உண்டு. கடவுளுக்காக நாம் உழைத்தது ஒருபோதும் வீண் போகாது என்ற உறுதியைப் பெற்றுக் கொள்கிறோம்.
9. கடவுளின் சாட்சியாக வாழும் பேறு(மத் 5:14) உலகிற்கு ஒளியாக திகழ்ந்து, ஒளிரும் பேறு கிடைக்கும். நமது வாழ்வாலும் வார்த்தையாலும் கடவுளுக்கு சாட்சியாக வாழும் போது, நமது அன்பு, நேர்மை, மன்னிப்பு, தாழ்மை ஆகியவற்றின் வழியாக மற்றவர்கள் (மத் 5:16) கிறிஸ்துவின் அன்பை அறிய வாய்ப்பு ஏற்படுகிறது.
10. நிலையான விண்ணக மகிழ்ச்சியை நோக்கி வாழ்கிறோம் (மத் 25:21) அவரது மகிழ்ச்சியில் நிலையாக பங்கு கொள்ளும் பேரின்பத்தை பெறுகிறோம். இதைவிட வேறு பலன் என்ன வேண்டும்? நற்செய்தி பணியின் பலன் என்பது பொருளாதார வளம், புகழ், எல்லாம் வேண்டுதல்களும் நிறைவேறுவது என்பது பொருள் அல்ல. துன்பங்களின் நடுவிலும் இறைவனில் நிலைத்திருப்பதும், பிறருக்குப் பணி

செய்வதும், இறைவனின் அருளில் வளர்வதும் அதன் மூலம் பலரை இறைவனிடம் அழைத்து வருவதும் ஆகும். அதே நேரத்தில் நம் கடவுள் இவ்வுலகில் நாம் வாழும் வரை, நம் தாய்நாட்டிற்குப் போகும் வரை, நமது பயணம் இவ்வுலகில் முடியும் வரை நம் அனைத்து தேவைகளையும் (மத் 6:33) நிறைவேற்றி, நம்மை பாதுகாத்து வழிநடத்துவார் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. எனவே நாம் ஒவ்வொருவரும் நமது அர்ப்பணத்தில் நிலைத்திருந்து அதன் முழுப் பலன்களைப் பெற்றுக் கொள்ள ஒருவர் மற்றவருக்காக செபிப்போம்.

உறவிலும் பணியிலும் உங்களோடு பயணிக்கும்

உங்கள் சகோதரன்

நற்பணி அ. சகாயராஜா

அக்டோபர் 2026 புதிய பணியாளர்கள் பயிற்சி

- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி -I தங்கச்சிமடம், புனித குழந்தை தெரசாள் கோவிலில் 10.10.2026 அன்று நடைபெற்றது. 16 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி G.M.S ராணி, நற்பணி X. லூர்துமேரி, ஆகியோர் வழிநடத்தினார்கள்.
- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - II பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் 11.10.2026 அன்று நடைபெற்றது. 7 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி A. பிரான்சிஸ் சேவியர், நற்பணி A. யூஜீன் அமலராஜ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.
- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - III காளையார்கோவில், தந்தை. ஜோசப் சேவியர் அரங்கில் 11.10.2026 அன்று நடைபெற்றது. 15 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி V. செங்கோல்மேரி, நற்பணி. S. இராஜேந்திரன் ஆகியோர் வழிநடத்தினார்கள்.
- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - IV சிவகங்கை, வியான்னி அருள்பணி மையத்தில் 11.10.2026 அன்று நடைபெற்றது. 12 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி G.M.S ராணி, நற்பணி P. சகாயராணி, ஆகியோர் வழிநடத்தினார்கள்.
- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - V ஓரியூர் புனித அருளானந்தர் திருத்தலத்தில் 11.10.2026 அன்று நடைபெற்றது. 3 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி S. பால்ராஜ், நற்பணி கோ. அம்பிகா எலியாஸ், நற்பணி இரா. அருள்பிரகாசம் ஆகியோர் வழிநடத்தினார்கள்.
- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி VI அமைதியகம், காயாவயலில் 18.10.2026 அன்று நடைபெற்றது. 18 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை Sr. செலின் பிரபா, நற்பணி S.சகாயராணி நற்பணி M. ரோஸ்லின் ரீட்டா ஆகியோர் வழிநடத்தினார்கள்.
- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VII சி.கே. மங்கலம், புனித பேதுரு கோவிலில் 18.10.2026 அன்று நடைபெற்றது. 5 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி A. தமிழ் செல்வி, நற்பணி A. ஜான்சிமேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.
- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி - VIII சாயல்குடி, புனித ஆரோக்கிய அன்னை கோவிலில் 18.10.2026 அன்று நடைபெற்றது. 17 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி M. அருள் மரியநாயகம், நற்பணி T. ஸ்டீபன், நற்பணி J. சார்லஸ் ஆகியோர் வழிநடத்தினார்கள்.
- சிவகங்கை மறைமாவட்டப் புதிய பணியாளர்கள் பயிற்சி IX இராசசிங்கமங்கலம், தூய ஆவியார் கோவிலில் 25.10.2026 அன்று நடைபெற்றது. 5 பேர் கலந்து கொண்ட இப்பயிற்சியை நற்பணி J. மேரிபுஷ்பம், நற்பணி S. தைனஸ்மேரி ஆகியோர் வழிநடத்தினார்கள்.

✸02.10.2026 அன்று அம்புரோஸ் அறநெறி அமைப்புக் கூட்டம் ஆவுடைப்பொய்கை நற்பணி செபஸ்தியான் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. அனைத்து உறுப்பினர்களும் பங்கேற்று ஆலோசனை வழங்கினர்.

✸03.10.2026 அன்று தஞ்சை மறைமாவட்டம் வேளாங்கண்ணி ஆரோக்கிய அன்னை பெருங்கோவிலில் 272 தஞ்சை மறைமாவட்ட தன்னார்வ நற்செய்தி பணியாளர்கள் மேதகு ஆயர் முனைவர் சகயாராஜ் அவர்கள் முன்னிலையில் அர்ப்பணம் ஏற்றார்கள். அருட்பணி பால்ராஜ், மற்றும் அருட்சகோ. பங்குராஜ் நிகழ்வை சிறப்பாக எற்பாடு செய்து ஒருங்கிணைத்தனர்.

✸02.10.2026 முதல் 15.10.2026 வரை 10 வியாகுல அன்னை நவதுறவியர் நற்செய்தி அறிவிப்புப்பயிற்சி மற்றும் அனுபவத்தில் ஈடுபட்டனர். முதல் 3 நாள்கள் அவர்களுக்கு அருள்சான்று நிலையத்தில் பயிற்சி வழங்கப்பட்டது. அதைனைச் தொடர்ந்து சிங்கம்புணரி, அஞ்சுகோட்டை, கஸ்பார் நகர், சம்பை மற்றும் திருவெற்றியூர் பங்குத்தளங்களில் களப்பணி ஆற்றினர். 15.10.2026 அன்று நவதுறவியர் மேலாளர் அருள்சகோ. பாஸ்கலின் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற திறனாய்வுடன் பயிற்சி நிறைவுற்றது.

✸04.10.2026 அன்று ஓரியூரில் நடைபெற்ற சிவகங்கை மறைமாவட்ட ஆண்டுத் திருப்பயணத்தில் பாதுகாப்பு & உணவு வழங்குதல் போன்ற பணிகளை நற்செய்திப்ப பணியாளர்கள் சிறப்புடன் ஆற்றினர்.

✸04.10.2026 அன்று புதுக்கோட்டை திரு இருதய ஆண்டவர் கோவிலில் புதிய பணியாளர்கள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி A. சகாயராஜா, நற்பணி. S. சகாயராணி ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✸04.10.2026 அன்று இராஜகோபாலபுரம் செபமாலை அன்னை கோவிலில் புதிய பணியாளர்கள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி M. விசுவாசம், நற்பணி S. ஹென்றி ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✸04.10. 2026 அன்று மணல்மேடு பெரிய நாயகி கோவிலில் புதிய பணியாளர்கள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி A.R. சூசைராஜ், நற்பணி M. லூயி ஜான்போஸ்கோ ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✸07.10.2026 அன்று காயாவயல் அமல அன்னை அமைதியகத்தில் அருளமுது ஆதாரக் குழுக் கூடுகை நடைபெற்றது. 42 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி J. ஆரோக்கியசாமி, நற்பணி ஜெயசீலி, நற்பணி தைனஸ்மேரி ஆகியோர் வழிநடத்தினர்கள்.

✸07.10.2026 அன்று பரமக்குடி அருள்சான்று நிலையத்தில் அருளமுது ஆதாரக் குழுக் கூடுகை நடைபெற்றது. 70 பேர் இணைந்து செபித்த இவ்வழிபாட்டை நற்பணி. மோட்ச அலங்காரம், நற்பணி ஜெயசீலன், நற்பணி மலர் ஆகியோர் வழிநடத்தினர்கள்

✸9,10&11.10.2026 ஆகிய நாள்களில் ஆண்டுத் தியானம் IV அருள்சான்று நிலையத்தில் நடைபெற்றது. அருள்தந்தை ரூபன் SDB அவர்கள் தியானத்தை வழிநடத்தினார். நற்பணி எம். சேவியர், நற்பணி கே. ஜஸ்டின் கபிரியேல் ஆகியோர் நெறிபடுத்தினார்கள். இத்தியானத்தில் 89 பணியாளர்கள் பங்கேற்றார்கள்.

✸10.10.2026 அன்று மாந்தை திரு இருதய ஆண்டவர் கோவிலில் புதிய பணியாளர்கள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி M. லூயி ஜான்போஸ்கோ, நற்பணி. A.R. சூசைராஜ் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✸10.10.2026 அன்று தஞ்சை, அண்ணாநகர் புனித செபஸ்தியார் கோவிலில் புதிய பணியாளர்கள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி I. செபஸ்தியான், நற்பணி. அந்தோனி பிரகாஷ் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✸11.10.2026 அன்று தரங்கம்பாடி புனித செபமாலை அன்னை கோவிலில் புதிய பணியாளர்கள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி A. சத்தியேந்திரன்

நற்பணி. தை. அமல்ராஜ் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✷11.10.2026 அன்று மணல்மேல்குடி புனித ஆரோக்கிய மாதா கோவிலில் புதிய பணியாளர்கள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி I. செபஸ்தியான், நற்பணி. அந்தோனி பிரகாஷ் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✷11.10.2026 அன்று வட்டாரத் தியானக்கூட்டம் புளியால் சருகணி வட்டாரங்களில் நடைபெற்றது.

✷17.10.2026 அன்று தஞ்சை மங்களபுரம் புனித லூர்து அன்னை கோவிலில் புதிய பணியாளர்கள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S. மோட்சஅலங்காரம், நற்பணி I. ஆரோக்கியசாமி ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✷18.10.2026 அன்று சம்மனசூர் புனித மிக்கேல் அதிதூதர் கோவிலில் புதிய பணியாளர்கள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி P. சகாயராணி, நற்பணி J. ஆரோக்கியசாமி ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✷18.10.2026 அன்று மன்னார்குடி புனித சூசையப்பர் கோவிலில் புதிய பணியாளர்கள் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி M. விசுவாசம், நற்பணி M. லூயி ஜான்போஸ்கோ ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✷18.10.2026 அன்று தஞ்தாவூர் திரு இருதய ஆண்டவர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S.மோட்ச அலங்காரம், நற்பணி S. அந்தோனி பிரகாஷ் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✷18.10.2026 அன்று அறந்தாங்கி கிறிஸ்து அரசர் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி J. அருள் இளங்கோ, நற்பணி A. ஆரோக்கியசாமி ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✷18.10.2026 அன்று தேவகோட்டை, ஆவுடைப்பொய்கை, மானாமதுரை. ஆர்.எஸ். மங்கலம் வட்டாரங்களில் வட்டாரத் தியானக்கூட்டம் நடைபெற்றது.

✷19.10.2026 அன்று செய்தியாளர்கள் பயிற்சி ஆனந்தா அருங்கொடை மையம், ரஸ்தாவில் நடைபெற்றது. இதில் 108 பணியாளர்கள் கலந்து கொண்டார்கள். இப்பயிற்சியை அருள்பணி சௌந்தர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் நற்பணி சகாயராஜா ஆகியோர் நெறிப்படுத்தினார்கள்.

✷24,25 & 26.10.2026 ஆகிய நாள்களில் ஆண்டுத்தியானம் -V அமைதியகத்தில் நடைபெற்று. அருள்தந்தை ரூபன் SDB அவர்கள் தியானத்தை வழிநடத்தினார். நற்பணி ஜ. செபஸ்தியான், நற்பணி சகாய லூயி ஆகியோர் நெறியாளர்களாக செயல்பட்டனர். 86 பணியாளர்கள் பங்கேற்றார்கள்

✷25.10.2026 அன்று இடைக்காட்டூர், சாயல்குடி வட்டாரங்களில் வட்டார தியானக்கூட்டம் நடைபெற்றது.

✷25.10.2026 அன்று நாகபட்டிணம், புனித லூர்துமாதா கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S. அந்தோனி பிரகாஷ், நற்பணி சவரிமுத்து ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✷25.10. 2026 அன்று எருக்கூர், புனித சிந்தாத்திரிமாதா கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி. S. இராஜேந்திரன், நற்பணி. A. தனிநாயகம் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✷25.10.2026 அன்று சீர்காழி, புனித லூர்து மாதா கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி A. ஆரோக்கியசாமி, நற்பணி M. விசுவாசம் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✷25.10.2026 அன்று மயிலாடுதுறை, புனிதசவேரியார் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி S.மோட்ச அலங்காரம், நற்பணி A.R. சூசைராஜ் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

✷25.10. 2026 அன்று திருகோகர்ணம் புனித பிரான்சிஸ் சலேசியார் கோவிலில் புதிய பணியாளர்களின் பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியை நற்பணி J.ஆரோக்கியசாமி, நற்பணி கோ. அம்பிகா எலியாஸ் ஆகியோர் நெறிபடுத்தினார்கள்.

புளியால் வட்டாரம்

புளியால் வட்டாரத் தியானக் கூட்டம் 11.10.2026 ஞாயிறு அன்று புளியால் பங்கு திடக்கோட்டை கிளைக்கிராம புனித அடைக்கல அன்னை கோவிலில் காலை 10.30 மணிக்கு வட்டாரப் பணியாளர்களின் தொடக்க வழிபாட்டுடன் ஆரம்பமானது. செயலர் தொடர்பாளராகக் கலந்து கொண்டு "நற்செய்திப் பணியாளராகிய நான் சம நிலையில் வாழ்கிறேனா?" என்ற மையச் சிந்தனையில் செய்தி வழங்கி நெறிப்படுத்தினர். நண்பகல் உணவிற்குப்பின் குழு ஆய்வு நடைபெற்றது. பரிந்துரை செபத்துடன் மாலை 04.00 மணிக்கு தியானம் நிறைவுற்ற இத்தியானத்தில் 26 பணியாளர்கள் பங்கேற்றார்கள்.

நற்பணி **கஸ்பார்,** வட்டாரக் கண்காணிப்பாளர்

ஆவுடைப் பொய்கை வட்டாரம்:

ஆவுடைப் பொய்கை வட்டாரத் தியானக் கூட்டம் 18.10.2026 ஞாயிறு அன்று ஆவுடைப் பொய்கை நற்பணி அந்தோணி அவர்கள் இல்லத்தில் காலை 10.30 மணிக்கு துவங்கியது. வட்டாரப் பணியாளர்கள் தொடக்க வழிபாட்டை நடத்தினர். செயலர் தொடர்பாளராகக் கலந்து கொண்டு "சமநிலையில் வாழ்கிறேனா ?" என்ற தலைப்பில் செய்தி வழங்கி நெறிப்படுத்தினார்கள். குழு ஆய்வைத் தொடர்ந்து பரிந்துரை செபம் மேற்கொள்ளப்பட்ட தியானம் மாலை 04.00 மணிக்கு நிறைவுற்றது . 34பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

நற்பணி **வில்லியம் செபஸ்டின்**. வட்டாரக் கண்காணிப்பாளர்

மானாமதுரை வட்டாரம்:

மானாமதுரை வட்டாரத் தியானக் கூட்டம் 18.10.2026 ஞாயிறு அன்று நற்பணி பிலோமினாள் அவர்களது இல்லத்தில் நடைபெற்றது. காலை 10.30 மணிக்கு வழிபாட்டுடன் தியானம் ஆரம்பமானது. 28 பணியாளர்கள் கலந்து கொண்டனர். இத்தியானத்தில் நற்பணி A. தனிநாயகம் அவர்கள் கலந்துகொண்டு "நான் சமநிலை நற்செய்தி பணியாளரா?" என்ற தலைப்பில் செய்தி வழங்கி நெறிப்படுத்தினார்கள். மாலை 4.00 மணிக்கு நன்றி செபம் மற்றும் கொள்கைப்பாடலுடன் தியானம் நிறைவுற்றது.

நற்பணி **I. புஷ்பராஜ்**. வட்டாரக் கண்காணிப்பாளர்

இராமேஸ்வரம் வட்டாரம்

இராமேஸ்வரம் வட்டார நற்செய்தி பணியாளர்களுக்கான தியானக் கூட்டம் 24.10.2026 அன்று நற்பணி மிக்கேல் மேரி இல்லத்தில் நடைபெற்றது. வட்டார பணியாளர்கள் தொடக்க வழிபாடு நடத்த நற்பணி M.மரியகிரகோரி நற்செய்தி பணியாளர்கள் சமநிலை பணியாளராக இருக்க வேண்டும் என்ற தலைப்பில் செய்தியுடன் வழிநடத்தினார். மதிய உணவுக்குப் பின் கலந்துரையாடல் நடைபெற்றது. 14 பணியாளர்கள் கலந்து கொண்டனர். நன்றி செபத்துடன் அறிவிப்புக்கு பிறகு கொள்கை பாடல் பாடி கூட்டம் நிறைவு பெற்றது.

P.**அந்தோணியம்மா,** வட்டார கண்காணிப்பாளர்

ஆர்.எஸ். மங்கலம் வட்டாரம்

ஆர்.எஸ். மங்கலம் வட்டார நற்செய்தி பணியாளர்களுக்கான வட்டார தியானம் கூட்டம் 18.10.2026 அன்று சூரமடை நற்பணி பிரியா மேரி இல்லத்தில் நடைபெற்றது. வட்டார பணியாளர்கள் தொடக்க வழிபாடு நடத்த நற்பணி M.மரியகிரகோரி நெறியாளராக கலந்து கொண்டு நற்செய்தி பணியாளர் நம நிலையில் செயல்பட வேண்டுமென்ற என்ற தலைப்பில் செய்தி வழங்கினார். மதிய உணவுக்குப் பின் கலந்துரையாடல் நடைபெற்றது. 35 பணியாளர்கள் கலந்து கொண்டனர். நன்றி செபத்துடன் கொள்கைப் பாடல் பாடி கூட்டம் நிறைவு பெற்றது.

நற்பணி S.**தைனஸ்மேரி,** வட்டார கண்காணிப்பாளர்

சருகணி வட்டாரம்

11.10.2026 ஞாயிறு அன்று இராதானூர் செட்டியேந்தல் கிராமத்தில் நற்பணி அ.மரியகண்ணு அவர்கள் இல்லத்தில் காலை 10.30 மணிக்கு துவங்கியது. தொடக்க வழிபாடு நடைபெற்றது. நற்பணி சகாயராஜா ஒருங்கிணைப்பாளர் அவர்கள்

தொடர்பாளராக கலந்து கொண்டு இறைச்செய்தி வழங்கினார்கள். நான் சமநிலை நற்செய்திப் பணியாளனா? என்ற தலைப்பில் வாழ்க்கை அனுபவத்துடன் இறைவார்த்தையுடன் ஆழ்ந்த கருத்துக்களை பகிந்து கொண்டார்கள.. மதிய உணவு இடைவேளைக்குப் பின் குழு ஆய்வு நடைபெற்றது. குழுத்தலைவர்கள் பணியாளர்களின் கருத்துக்களை தொகுத்து வழங்கினார்கள். எவற்றில் சமநிலையில் இல்லை எவற்றில் சமநிலையில் இருக்க வேண்டும் என்ற தலைப்பில் கருத்து விவாதிக்கப்பட்டது. பின் மன்றாட்டுக்கள் ஏறெடுக்கபட்டு கொள்கைப் பாடலுடன் தியானக் கூட்டம் நிறைவு பெற்றது. 23 பணியாளர்கள் கலந்து கொண்டனர் .

நற்பணி **லூயி ஆரோக்கியசாமி** வட்டாரக்கண்காணிப்பாளர்

பாம்பன் வட்டாரம்

பாம்பன் வட்டாரத் தியானக் கூட்டம் 24.10.2026 சனிக்கிழமையன்று பாம்பன் நற்பணி வளர்மதி இல்லத்தில் காலை 10.00 மணிக்கு வட்டாரப் பணியாளர்களின் தொடக்க வழிபாட்டுடன் ஆரம்பமானது. 24 பணியாளர்கள் கலந்து கொண்ட இந்தத் தியானத்தில் செயலர் தொடர்பாளராக கலந்து கொண்டு -நான் சமநிலையில் வாழும் பணியாளரா?- என்ற மையச் சிந்தனையில் நெறிப்படுத்தினார். குழு ஆய்வுடன் மாலை 04.00 மணிக்கு தியானம் நிறைவுற்றது.

நற்பணி **விமலாராணி,** வட்டாரக் கண்காணிப்பாளர்

சாயல்குடி வட்டாரம்

சாயல்குடி வட்டாரத் தியானக் கூட்டம் 25.10.2026 ஞாயிறு அன்று மூக்கையூர் புனித சந்தியாகப்பர் கோவிலில் வட்டாரப் பணியாளர்களின் தொடக்க வழிபாட்டுடன் காலை 10.30 மணிக்கு ஆரம்பமானது. 36 பணியாளர்கள் கலந்து கொண்ட தியானத்தில் செயலர் நெறியாளராகச் செயல்பட்டு ''நான் சமநிலையில் வாழ்கிறேனா?'' என்ற கருப்பொருளில் செய்தி வழங்கி வழிநடத்தினார். குழு ஆய்வுடன் மாலை 04.00 மணிக்கு தியானம் நிறைவுபெற்றது.

நற்பணி **ஸ்டீபன்,** வட்டாரக் கண்காணிப்பாளர்



ஆடுகளுக்கு வாயில் நானே

ஆபேல் நம்பிக்கையின் மூலம் இன்னும் பேசிக் கொண்டிருக்கிறார். (எபி.11:4)

தொடக்க நூலின் முதல் பகுதி அதிகாரங்களில் உள்ள நிகழ்வுகளை ஏற்றுக் கொள்வது சில வேளைகளில் கடினமாக உள்ளது. ஆனால் அந்த காலத்தில் வாழ்ந்த மனிதர்களை நாம் கவனிக்கும்போது நமக்கு நம்பிக்கை உண்டாகிறது. காயின் ஆபேல் சம்பவத்தை எடுத்துக் கொள்வோம். ஆபேலின் இரத்தம் பேசியது. இரத்தம் பேசுமா? ஆனால் கடவுள் இதைப் பார்த்தார்; என்ன செய்தாய் என்று காயினிடம் கேட்டார்; இருவரும் கடவுளுக்குக் காணிக்கை கொண்டு வந்தனர். காயின் ஒரு மதவாதியைப் போல காணிக்கையைக் கொண்டு வந்தான். ஆனால் ஆபேல் மந்தைக்குச் சென்று சிறந்ததைத் தேடித் தேடிக் கண்டு பிடித்து சிறந்த தலையீற்றுகளை காணிக்கையாகக் கொண்டு வந்தான். ஆபேல் தன்னைப் படைத்த கடவுளுக்கு எப்படிக் காணிக்கை கொடுக்க வேண்டும் என்பதை அறிந்திருந்தார். முதலில் தன்னிடம் உள்ள அனைத்தும் கடவுளிடமிருந்து வந்தவை என்ற எண்ணம் அவனுக்குள் இருந்தது. எனவேதான் அவன் கொடுத்தவற்றில் சிறந்ததைத் தேடி தலையீற்றுகளைக் கொண்டு வந்தான். ஆபேலின் உள்ளம் நம்பிக்கையும், நன்றி நிறைந்த உள்ளமாகவும் இருந்தது. ஆனால் காயின் முற்றிலும் மாறுபட்டவனாக இருந்தான். எனவேதான் அவனது காணிக்கையைக் கடவுள் ஏற்காத போது தன்னிடமுள்ள குறைகளை ஆய்ந்து பார்க்காமல் உடனே பொறாமை கொண்டு தன் சகோதரனைக் கொலை செய்தான். அநியாயமாக கொலை செய்யப்பட்டதால் தனக்கு நீதி கேட்டு ஆபேலின் இரத்தம் பேசியது. அவர் நேர்மையானவர் எனக் கடவுளிடமிருந்து நற்சான்று பெற்றார். அவருடைய காணிக்கைகளைக் குறித்துக் கடவுளே சான்று பகர்ந்தார். இறந்து போன போதிலும் இந்த ஆபேல் நம்பிக்கையின் மூலம் இன்னும் பேசிக் கொண்டேயிருக்கிறார் (எபி.11:4). நேர்மையாளரான ஆபேலின் இரத்தம் என்று நம் ஆண்டவர் இயேசு அவரை நினைவு கூர்ந்தார் (மத் 23:35). எத்தனையோ ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் எபிரேய நூலை எழுதிய ஆசிரியர் ஆபேலைக் குறித்து எழுதுகிறார். ஆபேல் வாழும் கடவுளைக் கண்டு

கொண்டார் எனவேதான் (எபி 11:4) ஆபேலின் இரத்தம் இன்னும் நினைவு கூறப்படுகிறது. ஆபேலின் நம்பிக்கை வாழ்வு நமக்கு முன் மாதிரியாக உள்ளது. காயினைப் போல நீங்கள் இராதீர்கள். அவன் தீயோனைச் சார்ந்தவன் என்று புனித யோவான் குறிப்பிடுகிறார் (1 யோ 3:12). மேலும், பகுத்தறிவு இல்லாத விலங்குகளைப் போன்றவர்கள் இவர்களுக்கு அழிவு உறுதி. ஏனெனில் இவர்கள் காயின் சென்ற வழியில் சென்றார்கள் என்று யூதா குறிப்பிடுகிறார் (யூதா:10-11). எனவே இறந்த நம்பிக்கையாளர்களை நினைவு கூறும் விதமாக நவம்பர் மாதத்தைச் சிறப்பிக்கிறோம். யார் எந்த நிலையில் இறந்தார்கள் என்பது நமக்குத் தெரியாது. ஆனால் இறந்துபோன அனைவரையுமே நாம் நினைவு கூறுகிறோம். ஆனால் நம் ஆண்டவர் வரும் நாளில் கிறிஸ்துமீது நம்பிக்கை கொண்ட நிலையில் இறந்தவர்கள் மட்டுமே முதலில் உயிர்த்தெழுவர் (1 தெச 4:16). அப்படியானால் மற்றவர்கள் நிலை என்னவாக இருக்கும்? நம் ஆண்டவர் இயேசு வல்லமையுள்ள தம் தூதரோடு வானிலிருந்து வெளிப்படும்போது இப்படி நிகழும். அப்பொழுது அவர் தீப்பிளம்பின் நடுவே தோன்றி கடவுளை அறியாதவர்களையும் நம் ஆண்டவர் இயேசுவைப் பற்றிய நற்செய்தியை ஏற்காதவர்களையும் தண்டிப்பார். இவர்கள் ஆண்டவருடைய சீர்மிகு மாட்சியைக் காண இயலாது.

அவருடைய திருமுன்னின்று அகற்றப்பட்டு முடிவில்லா அழிவைத் தண்டனையாகப் பெறுவர் (2தெச.1 : 8-9) எத்தனை வேதனை தரக்கூடிய நிகழ்வு என்பதை எண்ணிப் பார்ப்போம். கிறிஸ்துவிடம் நாம் கொண்டுள்ள எதிர் நோக்கு இவ்வுலக வாழ்வை மட்டும் சார்ந்திருந்தால் எல்லா மக்களையும் விட பரிதாப நிலையில் நின்று கொண்டிருப்போம் என்று புனித பவுல் குறிப்பிடுகிறார் (1 கொ 15:19) நாம் இறந்தபின்பு என்ன ஆவோம் என்பதற்குச் செல்வரும் இலாசரும் என்ற பகுதி மிக அற்புதமாக நமக்கு விளக்கப்பட்டுள்ளது. இருவரும் ஒரு நாள் இறந்துவிடுகிறார்கள். செல்வர் நரகத்தில் வேதனைப்படுகிறார். இலாசர் ஆபிரகாமின் மடியில் தேற்றப்படுகிறார் . உயிரோடு இருக்கும்போதே இறப்பிற்குப்பின் நாம் எங்கு செல்வோம் என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். ஏனென்றால் நரகத்திற்குப் போனபிறகு நமக்காக யாரும் உதவி செய்ய இயலாது. அந்த பணக்காரன் உதவி கேட்டு கதறுகிறான். அவனுக்குக் கிடைத்த பதில் என்ன? எங்களுக்கும் உங்களுக்கும் இடையே பெரும் பிளவு ஒன்று உள்ளது ஆகையால் இங்கிருந்த ஒருவர் கடந்து உங்களிடம் வர விரும்பினாலும் கடந்து வர இயலாது என்கிறார் (லூக் 16:19-31). நாம் எப்படி அந்த விண்ணக வீட்டை அடைவது? உயிரோடு இருக்கும்போது என்னிடம் நம்பிக்கை கொள்ளும் எவரும் என்றுமே சாகமாட்டார் என்று நம் ஆண்டவர் வாக்களித்துள்ளார் (யோவா 11:26). ஏனெனில், உயிர்த்தெழுதலும் வாழ்வும் அவரே (யோவா 11:25). இதில் உறுதியான நம்பிக்கை கொண்டிருந்தால் மட்டுமே அந்த நிலை வாழ்வை அடைய இயலும். மகனிடம் நம்பிக்கை கொள்வோர் நிலை வாழ்வைப் பெறுவார். நம்பிக்கைக் கொள்ளதோர் வாழ்வைக் காணமாட்டார். மாறாகக் கடவுளின் சினம் அவர்கள் மேல் வந்து சேரும் என்று ஆண்டவரே கூறியுள்ளார் (யோவா 3:36). இன்றைக்கு நற்கருணையையும் வாங்கிக் கொண்டு வேற்று தெய்வ வழிபாட்டு பழக்கங்களையும் பின்பற்றிக் கொண்டு இயேசுவை அறியாமல் வாழ்கிற மக்கள் நம் திரு அவையில் பலர் உள்ளனர். அவர்கள் மத்தியில்தான் நாம் நற்செய்தி அறிவிப்புப் பணி ஆற்றுகிறோம். உண்மையான ஒரே கடவுளாகிய நம் விண்ணகத் தந்தையையும் அவர் நம்மை மீட்கும்படி அனுப்பிய நம் ஆண்டவர் இயேசுவையும் அறிவதே நிலை வாழ்வு (யோவா 17:3). நாம் ஆண்டவர் இயேசுவின்மீது வைத்திருக்கும் நம்பிக்கை கறைதிரை இல்லாது இருக்க வேண்டும். அவரை நம்பி ஏற்காதவர்கள் எவரும் மக்களினின்று அடியோடு அழிக்கப்படுவர் (திப.3:21-23). அவ்வாறிருக்க இத்தகைய ஒப்பற்ற மீட்பைப் பற்றி நாம் அக்கறையுடன் இருப்போமானால் தண்டனையிலிருந்து எப்படித் தப்பமுடியும் என்று கூறப்பட்டுள்ளது (எபி.2:1-3). ஆண்டவர் இயேசுவின் மீது நாம் உறுதியான நம்பிக்கைக் கொள்ளும்போது; தம் வழியாகக் கடவுளிடம் வருபவரை அவர் முற்றும் மீட்க வல்லவராக இருக்கிறார். அவர்களுக்காகப் பரிந்து பேசுவதற்கென என்றுமே உயிர் வாழ்கிறார் (எபி 7:25). எனவே நம்பிக்கையாளர்களை நினைவு கூறும் இந்நாள்களில் நாம் கொண்டுள்ள நம்பிக்கையை கறைதிரையில்லாதபடிக்கு காத்துக் கொள்ள முழு முயற்சி செய்வோம்.

நற்பணி M. **விசுவாசம்**

வீண் வார்த்தைகளைப் பேசதே !

மனிதர் பேசும் ஒவ்வொரு வீண் வார்த்தைக்கும் தீர்ப்பு நாளில் கணக்குக் கொடுக்க வேண்டும் என உங்களக்குச் சொல்கிறேன். 'உங்கள் வார்த்தைகளைக் கொண்டே நீங்கள் குற்றமற்றவர்களாகவும், குற்றவாளிகளாகவும் கருதப்படுவீர்கள்" (மத் 12:36,37). பொய் சொல்லும் வாய் ஆன்மாவைக் கொல்லும் (சாஞா 1:11). 'ஆகவே, நீங்கள் பேசும்போது 'ஆம்' என்றால் 'ஆம்' எனவும் 'இல்லை' என்றால் 'இல்லை' எனவும் சொல்லுங்கள். இதைவிட மிகுதியாகச் சொல்வது எதுவும் தீயோனிடத்திலிருந்து வருகிறது' (மத் 5:37) என்கிறார் இயேசு ஆண்டவர்.

ஒரு மனிதனின் பெருமைக்காகவும் புகழுக்காகவும் பேசப்படும் வீண் வார்த்தைகள், வஞ்சகமான பாராட்டுக்கள், உண்மையை மறைக்கப் பிடிகொடாமல் பேசுவது, சுயலாபத்திற்காகப் புகழ்ந்து பேசுவது, பொய் வார்த்தைகளின் மூலம் பிறருக்குத் தவறான தோற்றத்தைக் காண்பிப்பது ஆகிய அனைத்தும் உண்மைக்குப் புறம்பாகச் சொல்லப்படும் வார்த்தைகள். இவைகள் சாத்தானால் உண்டானவைகள். சாத்தான் ஏமாற்றுவதில் வல்லவன். ஏனெனில், தொடக்க முதல் அவன் கொலையாளி. அவனிடம் உண்மை இல்லாததால், அவன் உண்மையைச் சார்ந்து நிற்கவில்லை. அவன் பொய் பேசும்போது அது அவனுக்கு இயல்பாக இருக்கிறது. ஏனெனில், அவன் பொய்யன், பொய்மையின் பிறப்பிடம். ஆகவே, ஒரு குறிபபிட்ட தோற்றத்தின் மூலம், அல்லது சில நடவடிக்கைகளின் மூலமும் ஒரு வார்த்தைகூட பேசாமல் பிறரை ஏமாற்றி வஞ்சிக்க முடியும். ஒருவன் எந்த வார்த்தையும் பேசாமல் பொய் சொல்ல முடியுமா? என்று கேட்கலாம். திபா 58:3 இதை உறுதி செய்கிறது. உண்மையில்லாத ஒன்றை ஒரு குறிப்பிட்ட தோற்றத்தின் மூலம் உண்மையாய் இருப்பதுபோலப் பாவனை செய்து பொய் சொல்ல முடியும். பொய் நம்மிடையே மிக சாதாரணமாக நடமாடும் பாவம் என்பதை நாம் அறிந்து கொள்ளவேண்டும்.

திருத்தூதர் பணி 5ஆம் அதிகாரத்தில் அனனியா தம் மனைவி சப்பிராவுடன் சேர்ந்து தன்னுடைய நிலத்தை விற்றான். விற்ற தொகையில் ஒரு பகுதியைத் திருத்தூதரின் காலடியில் கொண்டு வந்து வைத்தான். அப்பொழுது பேதுரு 'அனனியா, நீ நிலத்தை விற்ற தொகையில் ஒரு பகுதியை உனக்கென்று வைத்துக்கொண்டு தூய ஆவியாரிடம் பொய் சொல்லும்படி சாத்தான் உன் உள்ளத்தை ஆட்கொண்டதேன்? நீ மனிதரிடமல்ல கடவுளிடம் அல்லவா பொய் சொன்னாய்' என்று கூறினார். இந்த நிகழ்வில், தொழுகைக் கூடத்திற்கு வந்த அனனியா தனக்குண்டான அனைத்தையும் கடவுளுக்கென்று தந்துவிட்டதுபோன்ற பாசாங்குடன் வந்து நின்றார். அனனியா தனக்கென்று கொஞ்சம் பணத்தை எடுத்துக்கொண்டது எந்தவிதத்திலும் பாவமாகாது. ஆனால், எல்லாம் கொடுத்துவிட்டதுபோல அவன் பாசாங்கு செய்ததடியால் அது கொடிய பாவமாக மாறி, அவன் அந்த இடத்திலேயே இறந்துபோகும் நிலை ஏற்பட்டது. அவ்வாறே அவன் மனைவி சப்பிராவும் பொய் சொன்னதால் இறந்து போனதையும் நாம் அறிகிறோம். இரண்டு காசு மட்டுமே காணிக்கை போட்ட ஏழை விதவையைக் குறித்து பெருமிதம் கொள்ளும் இறைவன், சொத்தையெல்லாம் விற்றுக் கொடுக்க முன்வந்த தம்பதியரின் ஒரு பொய்யான செயலுக்காக எவ்வளவாய் தண்டிக்கிறார் என்பதை எண்ணிப் பாருங்கள். ஆகவே, 'ஆம்' என்றால் 'ஆம்' எனவும் 'இல்லை' என்றால் 'இல்லை' எனவும் சொல்லுங்கள் (மத் 5:37).

மெஷிலேமோத் என்ற முனிவரைச் சந்திக்க நான்கு நபர்கள் வந்தார்கள். முனிவரிடம், 'மனித வாழ்வில் ஏன் இத்தனை துன்பங்கள்? கடவுளைப் பற்றி புரிந்துகொள்ள முடியவில்லை. நீங்கள்தான் எங்களுக்குச் சொல்லவேண்டும்' என்று கேட்டார்கள். அறற்கு முனிவர் 'எனக்கும் தெரியாது' என்றார். வந்தவர்கள் 'ஐயா அனைத்தும் அறிந்த நீங்கள் தெரியாது என்று சொல்லக்கூடாது. நீங்கள்தான் ஒரு பதிலைச் சொல்லவேண்டும்' என்று அவரை வற்புறுத்தினார்கள். முனிவர், அவர்களுக்கு ஒரு

பாடம் கற்பிப்பதற்காக சரி "என்னுடன் வாருங்கள், ஒரு அதிசய விமானத்தில் உங்களை அழைத்துச் சென்று ஒரு காட்சியைக் காண்பிப்பேன்". அதுபற்றி சரியான கருத்துச் சொன்னால் தொடர்ந்து பயணிக்கலாம். தவறாக இருந்தால் விமானம் உங்களை கீழே தள்ளிவிடும்' என்றார். அவர்களும் சரி என்று ஒப்புக்கொள்ளவே விமானத்தில் பயணித்தார்கள். சற்றுதூரம் சென்றதும் காட்சியைப் பார்த்தார்கள்.

ஒரு புலி, பசியால் வாடிய தன் குட்டிகளுக்கு இறைதேடிப் புறப்பட்டது. அதே சமயம், மான் ஒன்று குட்டிகளை ஈன்று, பிறகு தண்ணீர் குடிக்க ஓடையைத் தேடிச் சென்றது. புலியின் கண்களில் மான் சிக்கிக்கொள்ள புலி அந்த மானைக் கொன்று தன் குட்டிகளுக்கு இறையாக்கியது. இதை அவர்கள் பார்த்தனர். முனிவர் நால்வரையும் பார்த்து. 'உங்கள் கருத்தைச் சொல்லலாம்' என்றார். முதலாம் நபர்: 'என்ன இருந்தாலும் புலி இப்படி செய்திருக்கக் கூடாது. மான் குட்டிகள் இப்போது அனாதையாகிவிட்டன' என்றான். உடனே விமானம் அவனை கீழே தள்ளியது. அவன் இறந்து போனான். மற்றொருவன்: பயத்துடன் 'புலி செய்தது சரிதான் குட்டிகளைக் காப்பாற்றத்தானே இதைச் செய்தது' என்றான். அவனும் விமானத்தால் தள்ளப்பட்டு இறந்துபோனான். மூன்றாம் நபர் மிகவும் உஷாராகி 'புலி செய்தது தவறு என்று சொல்ல முடியாது, சரி என்றும் சொல்ல முடியாது'. என்று பெருமிதத்தோடு நின்றான். அவனும் கீழே தளளப்பட்டு இறந்துபோனான். கடைசியாக இருந்தவனைப் பார்த்து முனிவர் 'நீ என்ன சொல்லப் போகிறாய்?' என்றார். அதற்கு அவன் 'தெரியல ஐயா' என்றான். இப்போது விமானம் அவரை கீழே தள்ளவில்லை. இருவரும் பாதுகாப்பாக பயணம் செய்தனர்.

ஆகையால், நம் அறிவுக்கு அப்பாற்பட்ட தெரியாத விஷயங்களைத் தெரிந்ததுபோல பேசக்கூடாது. ஆம் எனறால் ஆம் எனவும், இல்லை என்றால் இல்லை எனவும் உள்ளதை உள்ளபடி பேச வேண்டும். வீண் வார்த்தை எதுவும் உங்கள் வாயினின்று வரக்கூடாது. கேட்போர் பயனடையும்படி தேவைக்கேற்றவாறு அருள் வளர்ச்சிக்கேற்ற நல்ல வார்த்தைகளையே பேசுங்கள் (எபே 4:29).

நற்பணி **ஆரோக்கியசாமி.ஜே**



அணிந்து கொள்வோம் படைக்கலன்களை

'எந்நிலையிலும் நம்பிக்கையென்னும் கேடயத்தைப் பிடித்துக் கொள்ளுங்கள். அதைக் கொண்டு தீயோனின் தீக்கணைகளையெல்லாம் அணைத்து விட முடியும்'(எபே6:16).

நம்பிக்கையில் வேரூன்றியவர்களாக நல்ல கனிகளைக் கொடுக்க முயற்சி செய்து கொண்டிருக்கின்றோம். இறை நம்பிக்கை, தன்னம்பிக்கை இது இரண்டும் நம் வாழ்க்கைச் சக்கரம் சீராய் ஓடுவதற்கு தண்டவாளம் போன்றவைகள். இறை நம்பிக்கை இல்லாத தன்னம்பிக்கை நம் வாழ்க்கைப் பாதையை தடம் புரளச் செய்துவிடும். என் வாழ்வின் ஒவ்வொரு கட்டமும் கடவுளின் கரத்தில் உள்ளது (திபா31:15) என்பதை முழுமையாக நம்பும் போது தான் நமது தன்னம்பிக்கை உயிர்ப்புள்ளதாக இருக்கும்.

தாவீது நம்பிக்கையில் தளர்வுறும் போதெல்லாம் தன்னோடு பேசி, தன் இதயத்தோடு பேசி தனக்குத்தானே நம்பிக்கையூட்டிக் கொள்வதைக் காண்கிறோம். 'என் நெஞ்சே! நீ நம்பிக்கையிழப்பது ஏன்? நீ கலக்கமுறுவது ஏன்? கடவுளையே நம்பி இரு' (திபா42:5,11திபா43:5) என்று நம்பிக்கை இழக்கின்ற நேரங்களிலெல்லாம் தாவீது தனக்குள் பேசி நம்பிக்கையில் உறுதிப்பட்டது போல, நாமும் தளர்ந்து போகின்ற நேரங்களிலெல்லாம் நம்முடைய இதயத்தோடு பேசி நம்பிக்கையை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

பல நேரங்களில் நாம் சந்திக்கின்ற சவால்கள் நம் நம்பிக்கையைக் குலைத்து விடுகின்றன. அப்போதெல்லாம் தாவீதைப் போல நெஞ்சே நீ நம்பிக்கையிழப்பது ஏன்? என்று நம் இதயத்துக்கு கேள்வி எழுப்பி, ஆண்டவர் இதுவரை நமக்குச் செய்த

வியத்தகு நன்மைகளை நினைவுப்படுத்தி; நம் நம்பிக்கையை வலுப்படுத்திக் கொள்ள வேண்டும்.

நம்பிக்கை என்ற சொல்லை நாம் மூன்று வகைகளில் பயன்படுத்துகின்றோம். ஒன்று இறை நம்பிக்கை. இது நமது ஆன்ம வாழ்வு சார்ந்தது. எனினும் உலக வாழ்வின் வெற்றிகளுக்கு, சாதனைகளுக்கு நம்மை உந்தித் தள்ளுவது. இரண்டாவது தன்னம்பிக்கை. என்னால் முடியும், நான் சாதிப்பேன் என்ற உறுதியைத் தருவது. இது உலகு சார்ந்தது. மூன்றாவது நம்பிக்கை என்பது நாம் கொடுக்கின்ற கனியைச் சார்ந்தது.

ஆவியானவர் கொடையாகக் கொடுக்கும் நம்பிக்கை நமக்குள் செயல்பட்டால் தான் ஆவியானவரின் கனியான நம்பிக்கை நம்முள் உருவாகும். நம்பிக்கை என்னும் கனியால் நாம் கடவுளுக்குரியவர்கள் என்று சான்று வாழ்வு வாழ்கின்றோம். 'என் அடியான் மோசேயோடு அப்படியல்ல; என் வீடு முழுவதும் அவனே நம்பிக்கைகுரியவன்' (எண் 12:7). ஆண்டவர் மோசேயை தனது நம்பிக்கைக் குரியவனாக கருதியதால் தான் இஸ்ராயேல் மக்களை வழிநடத்திச் செல்லும் பொறுப்பை அவரிடம் ஒப்படைத்தார். ஆண்டவர் மோசேயை நம்பிக்கைக் குரியவராகக் கண்டதால் மோசேயோடு மறைப்பொருளாக அல்லாமல் நேர்முகமாகவும் தெளிவாகவும் பேசி தன்னை வெளிப்படுத்தினார் (எண் 12:8). நாம் நம்பிக்கைக்குரியோர்களாக கடவுள் பார்வையில் படும்போதுதான் அவரது திருவுளத் திட்டத்தை நம் வழியாகவும் செயல்படுத்துவார்.

'எனக்கு வலுவூட்டும் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு நன்றி செலுத்துகிறேன். ஏனெனில் நான் நம்பிக்கைக்குரியவன் என்று கருதி அவர் என்னைத் தம் திருத்தொண்டில் அமர்த்தினார்.' 1தீமோ1:12) என்று புனித பவுல் கூறுவது போல நம்மையும் நம்பிக்கைக் குரியவர்களாக எண்ணி ஆண்டவர் நற்செய்தி அறிவிப்புப் பணிக்காக அழைத்திருக்கிறார். நான் நற்செய்தி பணியாளர் என்பதால் நம்பிக்கைக்குரியவர் என்று எண்ணி, பிறர் நம்மிடம் பகிர்ந்து கொள்ளும் மறைவான செய்திகளை, வலிகளை, வேதனைகளை, ஆதங்கங்களை, குமுறல்களை நமக்குள் புதைத்துக் கொண்டு அவர்களுக்காக செபிக்கின்றோமா? அல்லது அவர்கள் உங்களை இப்படி சொன்னார்கள், அப்படி சொன்னார்கள் என்று மற்றவர்களிடம் கூறி மன வருத்தங்களை உண்டாக்கி சண்டை மூட்டி விடுகின்றோமா? நற்செய்தி பணியாளர் இறை நம்பிக்கை கொண்டிருக்க வேண்டியது எவ்வளவு கட்டாயமோ அதுபோல பிறருடைய நம்பிக்கைக்குரியவராக வாழ்வதும் கட்டாயம். 'வம்பளப்போர் மறை செய்திகளை வெளிப்படுத்திவிடுவர்; நம்பிக்கைக்குரியவரோ அவற்றை மறைவாக வைத்திருப்பர்.' (நீமொ11:13) என்று நீதிமொழிகள் கூறுவது போல பிறர் நம்மிடம் வெளிப்படுத்தும் விஷயங்களை நாம் மற்றவர்களிடம் வெளிப்படுத்தாமல் ஆண்டவரிடம் கூறி அவருக்காகச் செபிக்க வேண்டும். 'இரகசியங்களை வெளிப்படுத்துவோர் பிறருடைய நம்பிக்கையை இழக்கின்றனர்'(சீராக்27:16) நம்பிக்கையை இழக்கின்ற வகையில் நடந்து கொள்பவர் நல்ல நற்செய்தி பணியாளர் அல்ல.


நம்பிக்கைக்குரிய நண்பர்கள் பாதுகாப்பான புகலிடம் இத்தகைய நண்பர்களைக் கண்டவர்கள் புதையலைக் கண்டவர்கள் (சீராக்6:14) என்றும் நம்பிக்கைக்குரிய நண்பர்களுக்கு ஈடான செல்வம் எதுவுமில்லை (சீராக் 6:15) என்றும் நம்பிக்கைக்குரிய நண்பர்கள் நலமளிக்கும் மருந்து போன்றவர்கள் (சீராக் 6:16) என்றும் சீராக் ஞான நூல் கூறுகிறது. நம்பிக்கைக்குரியவர்கள் பிறருக்கு புகலிடமாகவும், புதையலாகவும், ஈடு இணையற்ற செல்வமாகவும், நலம் தரும் மருந்தாகவும் இருக்கின்றார்கள் . இதுதானே உண்மையான நற்செய்தி அறிவிப்புப் பணி.

நாம் எல்லாவற்றிலும் நம்பிக்கைகுரியவர்களாய் (சொல், செயல், பொறுப்புக்கள், பொருள்) இருந்தால் நன்று! நன்று நம்பிக்கைக்குரிய நல்ல பணியாளனே என்று ஆண்டவரால் பாராட்டப்படுவோம்.

நற்பணி **ச.சகாயராணி,** இராம்நகர்.

பணியாளர் குறுக்கெழுத்துப் போட்டி (07)

அக்டோபர் மாத நற்செய்திப் பணியாளர் செய்தி மடலில் (எளிமையே சீடத்துவம்) இருந்து மட்டுமே கேள்வி கேட்கப்பட்டுள்ளது



இடமிருந்து வலம்

2 எது மனிதர் நடுவில் முடிவில்லாத அடித்தளத்தை அமைத்துள்ளது.?
3 நாம் செய்யும் ஒவ்வொரு சிறு செயல்களிலும் எவ்வாறு இருக்க வேண்டும்?
5 தம் எதை அனுப்பி அவர்களை குணப்படுத்தினார்?
6 எது என்பது தனிநபர் சம்மந்தப்பட்டது?
8 எந்த மந்திரச்சொல் மன உறுதியையும் வெற்றியையும் தருகின்றது?
9 சவுலின் திருச்சட்ட ஆசிரியர் யார்?
11 எந்த ஞாயிறின் நூறாவது ஆண்டைக் கொண்டாட இருக்கின்றோம்?
12 உமது பேரன்பை நான் _____ கண்டடையச் செய்யும்.
13 அன்பைக் கொடுத்தால் _____
14 புனித ஜெரால்டு மஜெல்லா எந்த குடும்பத்தை சந்தித்தார்?
15 எதைத் தவிர்க்க வேண்டாம் ?

மேலிருந்து கீழ்

1 நமது ஆன்மீக வாழ்க்கையை விழிப்புடன் வைத்திருந்து சோதனைகளை மேற்கொள்ள உதவுவது எது?
4 தாவீது யாரைப் பார்த்து 'அவர் மேல் கை வைக்காதே' என்றார்?
7 ஆலோசனை வெறும் உணர்வுப் _____ முடிவடையக் கூடாது.
10 நீங்கள் ஒருவரையொருவர் என்ன செய்ய வேண்டாம்.

போட்டி விதிமுறைகள்

1. ஒவ்வொரு மாதமும் 15 ம் தேதிக்குள் விடைகள் வந்து சேர வேண்டும்

2. குறுக்கெழுத்து கட்டங்கள் நிரப்பப்படுவதோடு போன மாத பணியாளர் இதழில் நீங்கள் கண்டுபிடிக்கும் வார்த்தை இருக்கும் சரியான பக்க எண் குறிப்பிடப்படவேண்டும்
3. விடை குறித்து செயலரின் முடிவே இறுதியானது
4. பரிசுத்தொகை ரூ 500/-. நிறைய பேர் சரியான எழுதியிருந்தால், குலுக்கலின் மூலம் ஒரு நபருக்கு பரிசுத்தொகை வழங்கப்படும்.

சென்ற மாத போட்டியில் கலந்து கொண்டவர்கள் 16 பேர். சரியான விடை எழுதியோர்: நற்பணி பாத்திமா ராணி, மலர், மணவாளன்-**ம.மிக்கேல்பட்டணம்.** நற்பணி. மரிய கிரகோரி, செபஸ்தியான்-**ஆவுடைப்பொய்கை.** நற்பணி ஜெயந்தி, கரோலின் எமிலி-**பரமக்குடி.** நற்பணி தைனஸ், அலங்காரமேரி, ஏஞ்சல் நிர்மலா எழிலரசி-**இராம்நகர்.** நற்பணி லூவானா-**தங்கச்சிமடம்.** நற்பணி ஜான்சிமேரி, தைனஸ்மேரி-**ஆர்.எஸ் மங்கலம்**

குலுக்கல் மூலம் பரிசு பெறுபவர்: நற்பணி **ஏஞ்சல் நிர்மலா,** இராம்நகர்

அனைவருக்கும் வாழ்த்துகள்.



அனைத்துலகே ஆண்டவரை போற்றிடு

நாம் அனைவருமே கடவுளின் அன்புப் பிள்ளைகள். நம் ஒவ்வொருவரையும் அவரது அன்பினால் அவர் நிறைவாக வழிநடத்துகிறார். நாம் வாழ்கிற ஒவ்வொரு நொடிப்பொழுதும் அவரது இரக்கத்தினல் மட்டுமே. எனவே, நாம் அவரைப் போற்றுவதும் புகழ்வதும் அவருக்கு நன்றி செலுத்துவதும் நம் கடமை எதைச் செய்தாலும் அனைத்தையும் ஆண்டவர் இயேசுவின் பெயரால் செய்து அவர் வழியாய்த் தந்தையாம் கடவுளுக்கு நன்றி செலுத்துங்கள் (கொலோ : 3:17) என்று தூய பவுல் கூறுகிறார். பறவைகளையும் விலங்குகளையும் பார்த்திருப்போம். மாலையானதும் அதனதன் கூடுகளுக்கு வந்து சேர்ந்து சிறிது நேரம் ஒலி எழுப்பும். அதன் பின் அமைதியாகிவிடும். மீண்டும் அதிகாலையில் அதே போல ஒலி எழுப்பிவிட்டு உற்சாகமாக இரைதேட புறப்படுகின்றன. இதுதான் இயற்கையின் அழகான இயல்பான வியப்பான ஒழுங்கு முறை. எந்த உயிரினமும் எனக்கு அது சரியில்லை, எனக்கு இது சரியில்லை, எனக்கு பற்றாக்குறை என்று கவலைப்பட்டுப் புலம்புவதில்லை. உணவு நிறைவாக கிடைத்தாலும் குறைவாக கிடைத்தாலும், அல்லது நாளை கிடைக்குமோ கிடைக்காதோ என்ற எந்த எதிர்பார்ப்பும் இல்லாத நிம்மதியான அமைதி. தினமும் அதே உற்சாகம். ஏனென்றால், எல்லா உயிரினங்களையும் கணவுளின் கண்களும் நோக்குகின்றன. தக்க வேளையில் அவரே அவற்றிற்கு உணவளிக்கின்றீர் (திபா : 145:15). எல்லா உயிரினங்களும் அவரை அறிந்துள்ளன. அவரிடமிருந்தே பெற்றுக்கொள்கின்றன. அதே போல் உலகில் உள்ள அனைத்தையும் (திபா 148) ஆண்டவரைப் போற்றுங்கள் என்று திருப்பாடல் ஆசிரியர் பாடுகிறார். அதே போல் (திபா :150) நாம் கடவுளை எப்படி புகழ வேண்டும் என்று குறிப்பிடும் ஆசிரியர். இறுதியாக அனைத்து உயிர்களே ஆண்டவரைப் புகழ்ந்திடுக அல்லேலூயா (திபா : 150:6) என்று நிறைவு செய்கிறார். மாலையானதும் தன் கூடுகளுக்கு வரும் உயிரினங்கள், பறவைகள் எழுப்பும் ஒலி அந்த நாள் முழுவதும் தாங்கள் பெற்ற நன்மைகளுக்கு நன்றியாகவும், அதிகாலையில் எழுப்பும் ஒலி அவரைப் புகழ்வதாகவும் உணர்கிறேன். இதேமனநிலையை கடவுள் நம்மிடமும் எதிர்பார்க்கிறார். உயிர் வாழ எதை உண்பது, எதைக் குடிப்பது என்றோ, உடலுக்கு எதை உடுத்துவது என்றோ நீங்கள் கவலை கொள்ளாக்கூடாது (மத் :6:25). மேலும் உயிரினங்கள் அனைத்தும் அடுத்த நாளைக் குறித்த கவலை இல்லாதிருப்பது போல நாமும் (மத் :6:34) நாளைக்காக

கவலைப்படக்கூடாது. ஏனெனில், நாளைய கவலையைப் போக்க நாளை வழிபிறக்கும். என்ற நம்பிக்கையோடு முந்தைய தலைமுறைகளை எண்ணிப் பாருங்கள் ஆண்டவரிடம் பற்றுறுதி கொண்டிருந்தோருள் ஏமாற்றம் அடைந்தவர் யார்?அவருக்கு அஞ்சி நடந்தோரில் கைவிடப்பட்டவர் யார்? அவரை மன்றாடினோருள் புறக்கணிக்கப்பட்டவர் யார்? (சீஞா:2:10)என்ற இறைவார்த்தையை மனதில் வைத்து உயிரினங்கள் இரவில் அமைதியும் அதிகாலையில் உற்சாகமும் கொண்டிருப்பது போல் நாமும் இந்த செயற்கையான அறிவியல் உலகில் இயல்பு நிலையில் இரவில் நன்றியோடு அமைதியோடும் விடியலில் உற்சாகத்தோடும் கடவுளைப் போற்றி புகழ்ந்து நமது வாழ்வை தொடர்வோம்.

நற்பணி : M.ஜாயிஸ் ஜான் போஸ்கோ



திருவிவிலியமும் திருக்குறளும்

பென்யமின் நாட்டில் வாழ்ந்த குரு இலிக்கியாவின் மகன் எரேமியா. மென்மையான அன்புள்ளம் கொண்ட எரேமியா, துன்புரும் மனிதன் என்று அழைக்கப்பட்டவர். பாபிலோனிய மக்கள் தங்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுபடவும், மக்களுக்கு எதிராக தண்டனைத் தீர்ப்பு உரைக்கவும் இறைவனால் பணிக்கப்பட்டவர்.

ஆண்டவர் எரேமியாவிடம் 'என் சொற்களை உன் வாயில் வைத்துள்ளேன். பிடுங்கவும் தகர்க்கவும், அழிக்கவும் கவிழ்க்கவும், கட்டவும் நடவும், நான் உன்னை மக்களினங்கள் மேலும் அரசுகள் மேலும் பொறுப்பாளனாக ஏற்படுத்தியுள்ளேன்'. (எரே1:9-11) இஸ்ரேல், எகிப்து, பாபிலோன், யூதா போன்ற நாடுகளில் மக்களின் தீச்செயல்களையும் அநீதியான மற்றும் விபச்சார வாழ்க்கை முறைகளையும் கண்டு, வெகுண்டு கடவுளின் வார்த்தைகளால் எச்சரிக்கிறார் (எரே 3:25).

உங்கள் வழிகளையும் செயல்களையும் சீர்ப்படுத்துங்கள். அன்னியர்களையும் அனாதைகளையும் கைம்பெண்களையும் ஒடுக்காதீர்கள். மாசற்றோரின் இரத்தத்தை சிந்தாதீர்கள். வேற்றுத்தெய்வ வழிபாட்டை நிறுத்துங்கள். நேர்மையோடு நடந்து கொள்ளுங்கள் என்றும் கூறுகிறார் (எரே7:3-6). மக்கள் தம்மை புறக்கணிப்பார்கள், எதிர்ப்பார்கள் என்று தெரிந்தும் எச்சரிக்கை கொடுப்பதில் பின்வாங்கவில்லை எரேமியா.

திருக்குறளில் தூது என்ற அதிகாரத்தில் 690 வது குறட்பாவில்

இறுதி பயப்பினும் எஞ்சா திறைவற்
குருதி பயப்பதாம் தூது என்கிறார் திருவள்ளுவர்.

தனக்கு அழிவே தருவதாக இருந்தாலும் அதை எண்ணி பயந்து விடாமல் இறுதிவரை உறுதியுடன் கடமையாற்றுகிறவனே தன் தலைவனுக்கு நம்பிக்கையான நல்ல (பணியாளன்) தூதுவனாவான்.

எரேமியா கடவுளின் வாக்கின்படி நீதியோடு நேர்மையோடு அநீதி செய்யும் மக்களை கண்டித்தும் எச்சரித்தும் சிறந்த இறைவாக்கிராக்கினராக செயல்படுகிறார்.

எனவே நாமும் பயனில நீக்கி பயனுள பேசி ஆண்டவரின் நற்செய்தியை எரேமியா வழியில் அஞ்சாமல் எடுத்துரைத்து ஆண்டவரில் அகமகிழ்வோம்.

-நற்பணி. **முத்து ஜூலியானா**, இராம்நகர்.

அன்னை மரியா – பாதுகாப்பு வளையம்

புனித தொன் போஸ்கோ அவர்கள் 1863 ஜனவரி 6 அன்று காட்சி ஒன்றில் யானை ஒன்றை கண்டார். இந்தக் காட்சி தீமையின் கவர்ச்சியை அறிந்து, விலகி வாழ்ந்து இறைவனில் நிலைத்திருக்க அன்னை மரியாவின் பரிந்துரையை நாடி வாழ வேண்டும் என்ற செய்தியை இதன்மூலம் இளைஞர்களுக்கு வெளிப்படுத்தினர்.

புனிதர் கண்ட காட்சி இதுவே இளைஞர்கள் கூட்டமாக இருந்த இடத்திற்கு ஒரு பெரிய யானை வந்தது. ஆரம்பத்தில் அது அமைதியாகவும் நட்பாகவும் பழகியது. சில இளைஞர்கள் அதனுடன் மகிழ்ச்சியாக உறவு கொண்டாடினார். ஆனால் சிறிது நேரத்திற்குப் பிறகு, அந்த யானை திடீரெனத் தன் குணத்தை மாற்றிக் கொண்டு இளைஞர்களைத் தாக்கத் தொடங்கியது.

அப்போது அன்னை மரியாவின் திருவுருவம் உயிர்பெற்று, தனது மேலாடையை விரித்து, அதன்கீழ் இளைஞர்கள் பாதுகாப்பாக பயமின்றி நிற்க உதவி செய்தது. சில இளைஞர்கள் பிற இளைஞர்களையும் அந்தப் பாதுகாப்பான மேலாடைக்குள் கூட்டிச் சென்றனர்.

இக்காட்சியைக் கண்ட புனிதர் இளைஞர்கள் தூய்மையோடும், தீமையின் தாக்கங்களிலிருந்தும், உலக நாட்டங்களிலிருந்தும் தங்களைப் பாதுகாக்க அன்னை மரியாவின் பரிந்துரையை நாட வேண்டும் என்று கற்பித்தார். அன்னை மரியாவின் பரிந்துரை இளைஞர்கள் ஞானத்தைப் பெற வழிவகுக்கும். இந்த ஞானம் இளைஞர்களை -கற்புநெறி தவறியவரிடமிருந்தும், தேனொழுகப் பேசும் விலை மகளிடமிருந்தும் விலகியிருக்கச் செய்ய உதவும் (நீ மொ 2:16). எனவே, நமது இளைஞர்கள் அன்னை மரியாவின் பரிந்துரையை நாட வழிகாட்டுவோம்.

நற்பணி **அமல்ராஜ்**

ஒரு பணியாளரின் மன்றாட்டு



உமது முன்னிலையில் ஏற்புடையோனாய் நிற்க, முழு முயற்சி செய்திட (2 திமோ 2:15) எங்களை அழைத்தவரே இறைவா!

நாங்கள் பின்பற்றி வருகிற விசுவாசக் கோட்பாடுகளாலும், நற்போதனைகளாலும் வளர்ச்சி பெறவும் (1திமோ 4:6), எங்களுக்கு அளிக்கப்பட்ட அருள் கொடை குறித்து அக்கறையோடு இருக்கவும் (1திமோ 4:14) வேண்டிய மனநிலை தர வேண்டும் என்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

இது சாத்தியமா?

என்னிடமுள்ள கனிகொடாத கொடிகள் அனைத்தையும் தறித்து விடுவார். கனிதரும் அனைத்து கொடிகளையும் மிகுந்த கனி தருமாறு கழித்து விடுவார் (யோவா 15: 2).

நம் வாழ்வில் கனி வாழ்வு இல்லையென்றால் தறித்துவிடப்படுவோம். கனிவாழ்வு இருந்ததென்றால் கழித்துவிடப்படுவோம். தறித்து விடும்போதும், கழித்துவிடும் போதும் வலி உண்டு; வேதனை உண்டு; துன்பம் உண்டு. இது என்ன கொடுமை!

கனி தந்தாலும் வேதனை: கனி தராவிட்டாலும் வேதனை. கனி தராவிட்டால் வருகின்ற தண்டனை நியாயமானதுதான். கனி தந்தாலும் தண்டனை பெறுவது நியாயமற்றதல்லவா!

சற்று நிதானமாக அந்த இறை வார்த்தைப்பகுதியை வாசித்தால் மகிழ்ச்சி அடைவோம். நாம் மிகுந்த கனிதருமாறு கழித்து விடும் போது ஏற்படக்கூடிய வேதனை அல்லது வலி இக்காலத்தில் நாம் படும் துன்பங்கள் எதிர்காலத்தில் நமக்காக வெளிப்பட போகிற மாட்சியோடு ஒப்பிடத் தகுதியற்றவை (உரோ 8:18) அல்லவா! நல்லது செய்து கனி கொடுக்கும் போது ஆண்டவர் விருப்பப்படி இன்னும் மிகுந்து கனிகொடுக்கும்படியாய் கழித்து விடும்போது, ஏற்படுகிற அவ்வேதனை, வலி, துன்பம் ஆகியவற்றை நேர்மறை எண்ணத்தோடு அணுகுவது சாத்தியம் தானே!

ஒன்றை மட்டும் கருத்தில் கொள்ள வேண்டும் என நினைக்கிறேன். நம்மை கடவுள் தறித்துவிடாதபடிக்கு மட்டும் கவனமாக இருக்க வேண்டும். தறித்து எறியப்பட்டால் கூட்டிச்சேர்க்கப்பட்டு நெருப்பிலிட்டு எரிக்கப்படுவோமே! (யோவா 15:6).

நற்பணி **J. அருள் இளங்கோ**, இராம்நகர்

நவம்பர் 2026 வட்டாரத் தியானக் கூட்டம்

வ.எ	தேதி	வட்டாரம்	வழிநடத்துபவர்கள்
1	01.11.26	செஞ்சை 9442758641	செயலர் 9787967272
2.	01.11.26	ம. மிக்கேல்பட்டணம் 9524495693	நற்பணி M. மரியகிரகோரி 9486965799
3.	01.11.26	பரமக்குடி 9443503294	நற்பணி A. சகாயராஜா 7010407853
4.	01.11.26	காளையார்கோவில் 9444712047	நற்பணி A. தனிநாயகம் 9486037889
5.	15.11.26	இராம்நகர் 9442959569	நற்பணி A. தனிநாயகம் 9486037889
6.	15.11.26	சி.கே. மங்கலம் 9626303365	செயலர் 9787967272
7.	15.11.26	கமுதி 9443210772	நற்பணி M. மரியகிரகோரி 9486965799
8.	15.11.26	சிவகங்கை 9943165532	நற்பணி A. சகாயராஜா 7010407853
9.	22.11.26	செக்காலை 9150579311	செயலர் 9787967272
10.	22.11.26	சாலைகிராமம் 8526754557	நற்பணி A. சகாயராஜா 7010407853
11.	29.11.26	இராமநாதபுரம் 9486037889	செயலர் 9787967272
12.	29.11.26	முத்துப்பேட்டை 9940745169	நற்பணி M. மரியகிரகோரி 9486965799

நவம்பர் 2026

நற்செய்திப் பணிக்குழு பணித்திட்டம்

நாள்	நிகழ்வு	இடம்
01.11.26	புதிய பணியாளர்கள் பயிற்சி	அருள்சான்று நிலையம், காளையார்கேவில் புதுக்கோட்டை, இராஜகோபாலபுரம், மணல்மேடு, தரங்கம்பாடி
01.11.26	வட்டாரத் தியானக் கூட்டம்	செஞ்சை, ம.மிக்கேல்பட்டணம், காளையார்கோவில், பரமக்குடி
04.11.26	அருளமுது ஆதாரக்குழு கூடுகை	அமலன்னை அமைதியகம், காயாவயல், அருள்சான்று நிலையம், பரமக்குடி
07.11.26	பரிந்துரை செபம்	திரு இருதய ஆண்டவர் திருதத்லம், இடைக்காட்டூர்
08.11.26	புதிய பணியாளர்கள் பயிற்சி	சிவகங்கை, ஓரியூர்
14.11.26	புதிய பணியாளர்கள் பயிற்சி	தங்கச்சிமடம், மாந்தை, அண்ணாநாகர்-தஞ்சாவூர்
15.11.26	வட்டாரத் தியானக் கூட்டம்	இராம்நகர், கமுதி, சிவகங்கை, சி.கே. மங்கலம்
15.11.26	புதிய பணியாளர்கள் பயிற்சி	அமைதியகம், சி.கே. மங்கலம், சாயல்குடி, மன்னார்குடி, அறந்தாங்கி, தஞ்சாவூர் பேராயலம், சம்மனசூர் மணல்மேல்குடி
20-22 10.26	ஆண்டுத் தியானம் **VI**	அருள்சான்று நிலையம், பரமக்குடி
21.11.26	புதிய பணியாளர்கள் பயிற்சி	மங்களபுரம்
22.11.26	புதிய பணியாளர்கள் பயிற்சி	ஆர்.எஸ்.மங்கலம்
22.111.26	வட்டாரத் தியான கூட்டம்	செக்காலை
27-29 10.26	ஆண்டுத் தியானம் **VII**	அமைதியகம், காயாவயல்
28.11.26	புதிய பணியாளர்கள் பயிற்சி	நாகப்பட்டணம்
29.11.26	வட்டாரத் தியான கூட்டம்	சாலைகிராமம், இராமநாதபுரம், முத்துப்பேட்டை
29.11.26	புதிய பணியாளர்கள் பயிற்சி	ஆர்.எஸ் மங்கலம், எருக்கூர், சீர்காழி, மயிலாடுதுறை, திருகோகர்ணம்

ஆண்டுத் தியானம் — 2026

நாள்		இடம்	தியான வழிகாட்டி	நெறியாளர்கள்
1.	நவம்பர் 26 **20/21&22**	அருள்சான்று நிலையம் பரமக்குடி	Fr. **ரூபன்** SDB Sr. **விமலா** ISONE	நற்பணி GMS.ராணி நற்பணி S.ஸ்தனிஸ்லாஸ்
2.	நவம்பர் 26 **27/28&29**	அமல அன்னை அமைதியகம், காயாவயல்	Fr. **ரூபன்** SDB Sr. **விமலா** ISONE	நற்பணி J.அருள் இளங்கோ நற்பணி கோ.அம்பிகா எலியாஸ்
3.	டிசம்பர் 26 **04/05&06**	அமல அன்னை அமைதியகம், காயாவயல்	Fr. **ரூபன்** SDB Sr. **விமலா** ISONE	நற்பணி L.ஆரோக்கியசாமி நற்பணி A.R.சூசைராஜ்

நாள்	மையம்	வழிநடத்துபவர்கள்
01.11.26	அருள்சான்று நிலையம் பரமக்குடி	நற்பணி K. ஜஸ்டின் கபிரியேல் நற்பணி A. ஆரோக்கியமேரி
01.11.26	தந்தை ஜோசப் சேவியர் அரங்கம், காளையார்கோவில்	நற்பணி J. மேரிபுஷ்பம் நற்பணி A. யூஜின் அமலராஜ்
08.11.26	வியான்னி அருள்பணிமையம் சிவகங்கை	நற்பணி M. சகாயமேரி நற்பணி L. ஜோசப் இருதயம்
08.11.26	புனித அருளானந்தர் திருத்தலம், ஓரியூர்	நற்பணி A. ஜான்சிமேரி நற்பணி இரா. அருள்பிரகாசம்
14.11.26	புனித குழந்தை தெரசாள் கோவில், தங்கச்சிமடம்	நற்பணி பெ. தெரசா மிராண்டா நற்பணி X. லூர்துமேரி
15.11.26	அமலஅன்னை அமைதியகம் காயாவயல்	நற்பணி J. மேரிபுஷ்பம் நற்பணி M. ரோஸ்லின் ரீட்டா
15.11.26	புனித ஆரோக்கிய அன்னை கோவில், சாயல்குடி	நற்பணி J. சார்லஸ் நற்பணி T. ஸ்டீபன்
15.11.26	புனித பேதுரு கோவில் சி.கே. மங்கலம்	நற்பணி A. சகாயதமிழ்செல்வி நற்பணி A. ஜான்சிமேரி
22.11.26	தூய ஆவியார் கோவில் இராசசிங்கமங்கலம்	நற்பணி M. விசுவாசம் நற்பணி A. ஆரோக்கியமேரி நற்பணி S. தைனஸ்மேரி

இப்ப இல்லாட்டி எப்ப?

அணை உடைத்த நீர் **அழிவையே** தரும்....

மனம் உடைத்த வார்த்தை **இழிவையே** தரும்....

-எல்லாரோ

இதை நாம் உணர்வது இப்ப இல்லாட்டி எப்ப?

வாழ்வதும் நாவாலே, சாவதும் நாவாலே; வாயாடுவோர் பேச்சின் பயனைத் துய்ப்பர். (நீதிமொழிகள் 18:21)

வித்தியாசமான எண்களும் அத்தியாவசியமான இறைவார்த்தைகளும்

ஆண்டவர்க்கு அஞ்சுங்கள்; அதுவே ஞானம்; தீமையை விட்டு விலகுங்கள்; அதுவே அறிவு.	**யோபு 28:28**

நற்செய்திப் பணிக்குழுவின் இணைய தளம் www.arulchandrunilayam.org

நாள்	மையம்	நெறியாளர்கள்
01.11.26 I	திரு இருதய ஆண்டவர் கோவில், புதுக்கோட்டை	நற்பணி G.M.S. ராணி 9655264448 நற்பணி S. பால்ராஜ் 9789077287
01.11.26 I	புனித ஜெபமாலை அன்னை கோவில், இராஜகோபாலபுரம்	நற்பணி L. ஆரோக்கியசாமி 9787791869 நற்பணி V. ஜெயசீலி 8903681375
01.11.26 I	புனித பெரிய நாயகி கோவில், மணல்மேடு	நற்பணி A. சத்தியேந்திரன் 6379405762 நற்பணி தை.அமல்ராஜா 9443983519
01.11.26 I	புனித செபமாலை அன்னை கோவில், தரங்கம்பாடி	நற்பணி A.R. சூசைராஜ் 8248102600 நற்பணி M. லூயிஜான்போஸ்கோ 9443503618
14.11.26	திரு இருதய ஆண்டவர் கோவில், மாந்தை	நற்பணி I. செபஸ்தியான் 7339576282 நற்பணி S.மோட்ச அலங்காரம் 9843490206
14.11.26	புனித செபஸ்தியார் கோவில் அண்ணாநகர், தஞ்சை	நற்பணி S. அந்தோணி பிரகாஷ் 9787791869 நற்பணி A.ஆரோக்கியசாமி(போ.மையம்) 9787037717
15.1.26 II	புனித ஆரோக்கியமாதா கோவில், மணல்மேல்குடி	நற்பணி தை.அமல்ராஜா 9443983519 நற்பணி A.R. சூசைராஜ் 8248102600
15.11.26 III	புனித மிக்கேல் அதிதூதர் கோவில், சம்மனசூர்	நற்பணி G.M.S. ராணி 9655264448 நற்பணி S. சேசுராஜ் 9443404139
15.11.26 III	புனித சூசையப்பர் கோவில், மன்னார்குடி	நற்பணி I. செபஸ்தியான் 7339576282 நற்பணி S.மோட்ச அலங்காரம் 9843490206
15.11.26 III	திரு இருதய ஆண்டவர் கோவில், தஞ்சாவூர்	நற்பணி S. அந்தோணி பிரகாஷ் 9787791869 நற்பணி A.ஆரோக்கியசாமி(போ.மையம்) 9787037717
15.11.26 III	கிறிஸ்து அரசர் கோவில் அறந்தாங்கி	நற்பணி M. விசுவாசம் 9442758641 நற்பணி S. ராஜேந்திரன் 9865749356
21.11.26	புனித லூர்துஅன்னை கோவில், மங்களபுரம்	நற்பணி V. செபஸ்தியான் தார்சிஸ் 999485239 நற்பணி A.ஆரோக்கியசாமி (செக்காலை) 9843323439

த.பி.பா

நாள்	மையம்	நெறியாளர்கள்
28.11.26	புனித லூர்து மாதா கோவில் நாகப்பட்டிணம்	நற்பணி A. தனிநாயகம் 9486037889 நற்பணி A.R. சூசைராஜ் 8248102600
29.11.26 IV	புனித சிந்தாத்திரி மாதா கோவில், எருக்கூர்	நற்பணி I. செபஸ்தியான் 733957628 நற்பணி S.அந்தோணி பிரகாஷ் 787791869
29.11.26 IV	புனித லூர்துமாதா கோவில் சீர்காழி	நற்பணி S. பால்ராஜ் 978077287 நற்பணி A.R. சூசைராஜ் 8248102600
29.11.26 IV	புனித சவேரியார் கோவில் மயிலாடுதுறை	நற்பணி J. ஆரோக்கியசாமி 9443157260 நற்பணி L.ஆரோக்கியசாமி 9787791869
29.11.26 IV	புனித பிரான்சிஸ் சலேசியார் கோவில், திருகோகர்ணம்	நற்பணி S. சகாயராணி 9047495319 நற்பணி A. சத்தியேந்திரன் 6379405762



இலாத்தரன் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு விழா

கத்தோலிக்க திரு அவையில் இயேசுவுக்கும், அன்னை மரியாவுக்கும் புனிதர்களுக்கும் தான் விழா கொண்டாடுவது வழக்கம். ஆனால் ஒரு கோவிலுக்காக கொண்டாடப்படும் ஒரே பெருவிழா இலாத்தரன் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு விழா ஆகும். இவ்விழா ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 9ம் தேதி உலகம் முழுவதும் கொண்டாடப்படுகிறது.

உரோம் நகரில் நான்கு பெரிய பேராலயங்கள் உள்ளன. அவற்றில் மிகவும் பழமையானது, முக்கியமானது இலாத்தரன் பெருங்கோவில். இதன் முழு பெயர் புனித யோவான் இலாத்தரன் மறைமாவட்ட பெருங்கோவில். இது திருத்தந்தையின் நேரடி ஆளுகைக்கு உட்பட்ட கோவிலாகும். வத்திக்கானில் உள்ள புனித பேதுரு பசிலிக்கா பெரியதாக இருந்தாலும், திருஅவை சட்டப்படி இலாத்தரன் தான் தாய் கோவில். இதன் முகப்பில் 'உலகிலுள்ள அனைத்து கோவில்களுக்கும் தாயும் தலையுமான கோவில்' என்று எழுதப்பட்டுள்ளது. கிறிஸ்தவத்தின் ஆரம்ப 300 ஆண்டுகள் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்பட்டார்கள். அவர்களுக்குச் சொந்த கோவில்கள் இல்லை. கி.பி 313ல் உரோம பேரரசர் கான்ஸ்டன்டைன் மிலான் சட்டம் மூலம் கிறிஸ்தவத்திற்கு முழுச்சுதந்திரம் கொடுத்தார். அப்போது தனக்குச் சொந்தமான இலாத்தரன் அரண்மனையை திருத்தந்தை முதலாம் சில்வெஸ்டருக்குக் கொடுத்தார். அந்த இடத்தில் கட்டப்பட்டது தான் இந்த பெருங்கோவில். வரலாற்றில் கட்டப்பட்ட முதல் பொது கிறிஸ்தவ கோவில் இதுவே. கி.பி 324ம் ஆண்டு நவம்பர் 9ம் தேதி திருத்தந்தை சில்வெஸ்டர் இதை நேர்ந்தளித்தார். அதன் நினைவாகவே இவ்விழா கொண்டாடப்படுகிறது.

இந்தக் கோவில் பலமுறை தீ விபத்து, பூகம்பம், படையெடுப்பால் அழிந்து ஐந்து முறை மீண்டும் கட்டப்பட்டது. இப்போது உள்ள கோவில் 17ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இவ்விழா ஒரு கட்டிடத்தை போற்றுவதற்காக அல்ல. இது கிறிஸ்தவ சுதந்திரத்தின் அடையாளம், திரு அவையின் ஒற்றுமையின் அடையாளம். மேலும் இது நமக்கு ஒரு ஆன்மீக பாடத்தை கற்றுத்தருகிறது. கல்லால் கட்டப்பட்ட கோவில் மட்டும் கோவில்

அல்ல, நாம் ஒவ்வொருவரும் தூய ஆவியார் வாழும் உயிருள்ள கோயில்கள் என்பதை இவ்விழா நினைவூட்டுகிறது எனவே இலாத்தரன் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு விழா, நாம் திருத்தந்தையோடும், திருச்சபையோடும் ஒன்றித்திருக்கிறோம் என்பதை உணர்த்தும் விழா.

நற்பணி **வே. செங்கோல்மோரி,** காளையார்கோவில்.

(பயணம்: 92) சுழுகமாக இறைச் சமூகமாக



கடந்த பகுதியில் ஆலோசனை மேக்ரோ திறன்கள் பற்றி பார்த்தோம். தொடர்ந்து அதன் முக்கியதுவத்தை நிஜ வாழ்க்கை உதாரணங்கள், சிறுகதைகள் மற்றும் விரிவான வழக்கு ஆய்வுகள் (Case Studies) வாயிலாக சற்று விரிவாக பார்கலாம்.

7. ஒரு முக்கியமான விமர்சனப் பார்வை (A Critical Perspective)

Macro Skills கற்றுக்கொள்வது மட்டும் ஒருவரை சிறந்த ஆலோசகராக மாற்றாது. ஒருவர் நிறைய கேள்விகள் கேட்கலாம்; சிறப்பாக சுருக்கலாம்; சரியான பிரதிபலிப்புகளைச் செய்யலாம்; நல்ல ஆலோசனை நுட்பங்களை அறிந்திருக்கலாம். ஆனால் அவரிடம் மனிதநேயம், சுய விழிப்புணர்வு, தொழில்முறை எல்லைகள் மற்றும் நெறிமுறைப் பொறுப்பு இல்லையெனில், அந்தத் திறன்கள் இயந்திரமாகிவிடும்.

"Technique without empathy becomes mechanical; empathy without professional skill may become ineffective."

"அனுதாபமில்லாத நுட்பம் இயந்திரமாகும்; நுட்பமில்லாத அனுதாபம் பயனற்றதாகிவிடலாம்."

நிஜ வாழ்க்கைச் சிறுகதை: 'இயந்திர மனிதனாக மாறிய நிபுணர்'

சிறுகதை

ராகவ் ஒரு புகழ்பெற்ற உளவியல் ஆலோசகர். அவர் லண்டனில் மேக்ரோ மற்றும் மைக்ரோ திறன்களில் பல சான்றிதழ்களைப் பெற்றவர். அவரிடம் ஆலோசனைக்கு வந்தாள் மீரா. மீரா சமீபத்தில் தனது ஒரே மகளை ஒரு விபத்தில் இழந்த அதிர்ச்சியில் இருந்தாள். ராகவ் தனது மேஜையில் அமர்ந்து, தனது 'அம்பாசிடர் நுட்பங்களை' (Advanced Questioning Techniques) துல்லியமாகப் பயன்படுத்தினார். மீரா பேசும்போது சரியாக 5 நிமிடங்களுக்கு ஒருமுறை சம்மரி (Summarizing) செய்தார். 'நீங்கள் சொல்வதிலிருந்து எனக்கு புரிகிறது, மகளை இழந்த துக்கம் உங்களை வாட்டுகிறது, அப்படித்தானே?' என்று புத்தகத்தில் உள்ளபடி வார்த்தைக்கு வார்த்தை பிரதிபலித்தார் (Reflection).

ஆனால், ராகவின் கண்கள் அவரது கடிகாரத்தின் மீதும், அடுத்து வரவிருக்கும்

வாடிக்கையாளரின் ஃபைல் மீதும் இருந்தன. அவரது குரலில் தொழில்முறை நேர்த்தி இருந்தது. ஆனால் மனிதநேயத்தின் கதகதப்பு இல்லை. மூன்று அமர்வுகளுக்குப் பிறகு மீரா வருவிப்பதை நிறுத்திக்கொண்டாள். அவள் தனது தோழியிடம் கூறினாள்: 'அவர் ஒரு சிறந்த ஆலோசகர் தான். ஆனால் எனக்கு அவர் முன்னால் அமர்ந்திருக்கும் போது ஒரு ரோபோவிடம் பேசுவது போன்ற உணர்வு ஏற்பட்டது. என் வேதனையை அவர் ஒரு கேஸ் ஸ்டடியாகப் பார்த்தாரே தவிர, ஒரு மனிதனாகப் பார்க்கவில்லை.'

விளக்கம்: ராகவிடம் நுட்பங்கள் (Techniques) இருந்தன. ஆனால் உண்மையான அனுதாபம் (Empathy) இல்லை. இதனால் அவரது திறன்கள் வெறும் இயந்திரப் பயிற்சியாக சுருங்கி, தோல்வியடைந்தன.

வழக்கு ஆய்வு 1 (Case Study): கார்ப்பரேட் ஆலோசனையில் நுட்பமும் அனுதாபமும்

சூழல்: சுரேஷ் ஒரு பெரிய ஐடி நிறுவனத்தில் மனிதவள ஆலோசகராக (HR Counselor) பணியாற்றுகிறார். அவரிடம் அதிக மனஅழுத்தத்தால் பாதிக்கப்பட்ட திட்ட மேலாளர் (Project Manager) கார்த்திக் ஆலோசனைக்காக வருகிறார். கார்த்திக் தனது குழுவினர் தனக்கு ஒத்துழைப்பு தருவதில்லை என்றும், இதனால் தனது வேலை பறிபோகும் அபாயம் உள்ளதாகவும் கதறுகிறார்.

ஆலோசகரின் அணுகுமுறை (தவறான முறை): சுரேஷ் உடனடியாகத் தனது மேக்ரோ திறன்களைப் பயன்படுத்தி, 'சரி கார்த்திக், உங்கள் மேலாண்மைத் திறனில் என்ன குறைபாடு உள்ளது? உங்கள் குழுவை நீங்கள் எவ்வாறு வழிநடத்துகிறீர்கள்?' என்று இலக்கு சார்ந்த கேள்விகளை அடுக்கினார். அவர் கார்த்திக்கின் பயத்தையும், அவரது குடும்பப் பின்னணியையும் கேட்கத் தவறினார். கார்த்திக் தனக்கு அங்கு நீதி கிடைக்கவில்லை என உணர்ந்து ஆலோசனையை பாதியில் நிறுத்தினார்.

மாற்று அணுகுமுறை (சரியான முறை): சுரேஷ் முதலில் கார்த்திக்கின் நிலையை உணர்ந்து, 'கார்த்திக், உங்கள் இடத்தில் நான் இருந்தால் எனக்கும் இதே பயம் இருந்திருக்கும். உங்கள் பதற்றம் எனக்குப் புரிகிறது. முதலில் நாம் உங்கள் மனதை அமைதிப்படுத்துவோம், அதன் பிறகு குழுவின் பிரச்சினையைப் பார்ப்போம்' என்று கூறி அனுதாபத்தை வெளிப்படுத்தினார். அதன் பின்னரே மேக்ரோ திறனான 'செயல்முறை வழிகாட்டுதலை' (Process Guiding) தொடங்கினார். கார்த்திக் குணமடைந்தார்.

8. ஆலோசகரின் சுய விழிப்புணர்வு (Counselors Self-Awareness)

Macro Skills பயன்படுத்தும் போது ஆலோசகர் தன்னைத்தானே தொடர்ந்து கேட்க வேண்டிய சுயபரிசோதனைக் கேள்விகள் மற்றும் அதன் ஆழமான நிஜ வாழ்க்கை விளக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

கேள்வி: நான் உண்மையில் கேட்கிறேனா? அல்லது பதில் சொல்லுவதற்காகக் காத்திருக்கிறேனா?

ஆழமான விளக்கம்: உதாரணம்: ஆனந்த் என்ற ஆலோசகர், வாடிக்கையாளர் விவாகரத்து பற்றிப் பேசும்போது, அடுத்து என்ன தியரியைப் பயன்படுத்திப் பேசலாம் என்று மனதில் யோசித்துக் கொண்டிருக்கிறார். இது உண்மையான கேட்டல் அல்ல; பதிலுக்காகக் காத்திருப்பது.

கேள்வி: இந்த நபரின் அனுபவத்தை நான் புரிந்துகொள்கிறேனா? என்னுடைய தனிப்பட்ட கருத்து அவரை பாதிக்கிறதா?

ஆழமான விளக்கம்: உதாரணம்: பாரம்பரியக் குடும்பத்தில் வளர்ந்த ஒரு ஆலோசகரிடம், நவீன வாழ்க்கைமுறையை வாழ விரும்பும் ஒரு இளம் பெண் வரும்போது, ஆலோசகர் தன் சொந்த ஒழுக்க விதிகளின்படி அவளை மதிப்பிடக் கூடாது.

கேள்வி: நான் அவருடைய முடிவை மதிக்கிறேனா? என்னுடைய கலாச்சார அல்லது தனிப்பட்ட முன்மதிப்பீடுகள் செயல்படுகின்றனவா?

ஆழமான விளக்கம்: உதாரணம்: வாடிக்கையாளர் ஒரு குறிப்பிட்ட மத நம்பிக்கையைத் தீவிரமாகப் பின்பற்றுபவராக இருக்கலாம். ஆலோசகருக்கு அதில் உடன்பாடு இல்லை என்றாலும், அதைத் தரம் தாழ்த்திப் பேசாமல் மதிக்க வேண்டும்.

கேள்வி: இந்தச் சூழ்நிலை எனது தொழில்முறை திறனைத் தாண்டுகிறதா? தேவையானபோது ஷைளகூஷீளஷைஷைழியி அல்லது பிற நிபுணரின் உதவியை நாட வேண்டுமா?

ஆழமான விளக்கம்: உதாரணம்: கடுமையான மனச்சிதைவு (Schizophrenia) அல்லது தற்கொலை எண்ணம் கொண்ட ஒருவரை வெறும் பேச்சின் மூலம் குணப்படுத்த முடியாது என்பதை உணர்ந்து, உடனடியாக மனநல மருத்துவரிடம் (Psychiatrist) அனுப்ப வேண்டும்.

வழக்கு ஆய்வு 2 (Case Study): எல்லைகளும் பரிந்துரையும் (Referral)

பின்னணி: கவிதா என்ற ஆலோசகரிடம் 18 வயது மாணவன் வினித், தீவிரமான போதைப்பொருள் பழக்கத்திற்கு (Drug Addiction) ஆளாகி அதிலிருந்து மீள முடியாமல் அழுதுகொண்டே வருகிறான். கவிதாவிடம் பொதுவான கல்வி ஆலோசனை மற்றும் குடும்ப ஆலோசனைகளுக்கான மேக்ரோ திறன்கள் மட்டுமே உள்ளன.

சுய விழிப்புணர்வு நடவடிக்கை: கவிதா தனது திறன்களின் எல்லையை உணர்ந்தார். 'நான் வினித்துக்கு ஆறுதல் கூற முடியும், ஆனால் அவனது உடலில் ஏற்பட்டுள்ள உயிரியல் ரீதியான போதை தேவையை (Clinical Withdrawal Symptoms) என்னால் கட்டுப்படுத்த முடியாது' என்று தனக்குள்ளே சுய ஆய்வு செய்தார். அவர் வினித்திடம், 'வினித், நான் உன்னோடு துணையாக இருப்பேன். ஆனால் உனக்கு இப்போது ஒரு மருத்துவ மறுவாழ்வு மையத்தின் (De-addiction Specialist) உதவி தேவை. நாம் அங்கு செல்வோம்' என்று கூறி முறையான Referral செய்தார். இதன் மூலம் வினித்தின் வாழ்க்கை காப்பாற்றப்பட்டது.

முடிவு: இத்தகைய சுயஆய்வு இல்லாமல் கவிதா மேக்ரோ திறன்களை மட்டும் வைத்துக்கொண்டு அவனுக்குப் பேசிக்கொண்டே இருந்திருந்தால், அது வெறும் 'தொழில்நுட்பப் பயிற்சியாக' முடிந்து, வினித்தின் உயிருக்கே ஆபத்தாய் முடிந்திருக்கும்.

9. நினைவில் கொள்ள வேண்டிய மையக் கருத்து (Core Concept to Remember)

Micro Skills நமக்கு "எப்படி பேசுவது?" என்பதைக் கற்றுக்கொடுக்கின்றன. Macro Skills நமக்கு "ஆலோசனைச் செயல்முறையை எவ்வாறு வழிநடத்துவது?" என்பதைக் கற்றுக்கொடுக்கின்றன. இரண்டும் ஒன்றுக்கொன்று மாற்றாக அல்ல; ஒன்றுக்கொன்று துணையாகும்.

உவமைக் கதை: 'படகோட்டியும் திசைகாட்டியும்'

ஒரு பெரிய ஆற்றைக் கடக்க ஒரு படகு நின்றுகொண்டிருந்தது. அதில் இருவர் பயணித்தனர். ஒருவர் படகின் துடுப்பை மிக வேகமாக, துல்லியமாக இயக்கத் தெரிந்தவர் (Micro Skills) மற்றொருவர் அந்த ஆறு எங்கே முடிகிறது, எங்கு பாறைகள் உள்ளன, எந்த திசையில் சென்றால் கரை சேரலாம் என்று வரைபடம் வைத்திருப்பவர் (Macro Skills).

துடுப்பு மட்டும் போடுபவருக்கு திசை தெரியாது, அவர் வட்டமடித்துக் கொண்டே இருப்பார். வரைபடம் மட்டும் வைத்திருப்பவரால் துடுப்பு போடாமல் படகை நகர்த்த முடியாது. இருவரும் இணையும் போதுதான் படகு பாதுகாப்பாகக் கரையை அடையும்.

பயன்பாடு: ஆலோசனையில் மைக்ரோ திறன்கள் (வார்த்தைகள், கண் தொடர்பு) என்பது துடுப்பு போன்றது. மேக்ரோ திறன்கள் (ஒட்டுமொத்த இலக்கு, அமர்வின் கட்டமைப்பு) என்பது திசைகாட்டி மற்றும் வரைபடம் போன்றது.

அசை போட அரை நிமிடம்:

"நடைமுறை அறிவும்-நாளடைவில் பெறும் பயிற்சியும்-நம்மை முதிர்ச்சியுள்ள 'ஆலோசகராக்கும்'

This is for informational purposes only. For medical advice or diagnosis, consult a professional. AI responses may include mistakes.

சகோ. S.**ஜான் ஜோ பிரபாகர்.** SHJ.
மனநல ஆற்றுபடுத்துநர், பரமக்குடி.

என்னை மன்னியும்

- 'கடவுளிடம் அன்பு செலுத்துவோர் தம் சகோதர சகோதரிகளிடம் அன்பு செலுத்த வேண்டும். இதுவே அவரிடமிருந்து நாம் பெற்ற கட்டளை'. என்ற அறிவுரையை மறந்து பிறரை வெறுத்துப் பகைமை, வன்மத்தோடு வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன் இறைவா! என்னை மன்னியும் (1யோவா 4:21)
- 'நீர் எங்கே சென்றாலும் நானம் உம்மைப் பின்பற்றுவேன்' என்று அர்ப்பணத்தில் கொடுத்த வாக்குறுதியை மறந்து உலகம், புகழ், செல்வம், தீமை ஆகியவற்றின் பின் சென்றதை எண்ணி மனம் வருந்துகிறேன் இறைவா! என்னை மன்னியும் (லூக் 9:57)
- 'தீய ஆவிகள் உங்களுக்கு அடிபணிகின்றன என்பது பற்றி மகிழ வேண்டாம். மாறாக, உங்கள் பெயர் விண்ணகத்தில் எழுதப்பட்டிருக்கிறது என்பது பற்றியே மகிழுங்கள்' என்பதை அறிந்தும் அற்புதங்கள் நிகழ்ந்தால் போதும் என்ற உலக மனநிலையில் வாழ்ந்ததை எண்ணி மனம் வருந்துகிறேன் இறைவா! என்னை மன்னியும் (லூக் 10:20).
- 'மோசேயுடன் நான் இருந்ததுபோல் உன்னோடும் இருப்பேன், உன்னைக் கைநெகிழ மாட்டேன்; கைவிடவும் மாட்டேன்' என்ற வாக்குறுதியை மறந்து உமது உடனிருப்பை உணராமல் வாழ்நததை மனம் வருந்துகிறேன் இறைவா! என்னை மன்னியும் (யோசு 1:5).

நற்பணி S.P. **சவரிமுத்து**, இராம்நகர்

செப வீரர்களுக்கு

இம்மாத செபக் கருத்து

- செல்வம் முறையாகப் பயன்படுத்தப்படவும், குறிப்பாக நீதியை நிலை நாட்டப் பயன்படவும்
- செல்வத்தை கடவுளாக்கி சுயநலம், பேராசை போன்றவைகளால் உலகம் சீரழியாமால் காக்கப்பட
- உலக செல்வங்கள் ஏழைகளோடு நீதியோடு பகிரப்பட
- அறுவை சிகிச்சைக்குப் பின் திருத்தந்தை முழு குணம் பெற்று நல்ல உடல் நலத்தோடு பணியாற்ற
- நல்ல மழை பெய்து விவசாயம் செழிக்க
- இறந்த நற்செய்திப் பணியாளர்கள் நிலைவாழ்வின் பேரின்பத்தைப் பெற
- போர் சூழல் நிலவும் பகுதிகளில் அமைதி நிலவவும், மக்கள் அச்சமின்றி வாழவும்
- இந்தியாவின் சனநாயகமும், மதச்சார்பின்மையும் மாண்புடன் பேணப் படவும், நீதித்துறை, தேர்தல் ஆணை மற்றும் ஊடகத் துறைகள் நேர்மையுடனும் பாரபட்சமின்றியும் பணியாற்றிட

விரும்பத்தக்க செயல்பாடு:

- விண்ணகப் பிறப்படைந்த நற்செய்திப் பணியாளர் ஒருவருக்காக இம்மாதம் முழுவதும் இறை வேண்டல் செய்தல்.



ஆண்டுத் தியானம்



அருள்சான்று நிலையம்

அமைதியகம்



அருளமுது ஆதாரக்குழு கூடுகை



அருள்சான்று நிலையம்

அமைதியகம்



நவ துறவியர் பயிற்சி





செய்தியாளர்கள் பயிற்சி



நவ துறவியர் பயிற்சி



செய்தியாளர்கள் பயிற்சி

படங்களைத் தொண்டு இறைவார்த்தையை கண்டுபிடியுங்கள்?

படங்களைக் கொண்டு நினைவுக்கு வரும் இறைவார்த்தையை சட்டென்று சொல்லுங்கள் பார்ப்போம்.

துப்பு வேண்டுமா? **நீதிமொழிகள் 7,8,9 அதிகாரங்களுக்குள்**













வட்டாரத் தியானக் கூட்டங்கள்



















Narseithi Paniyalar
is published on behalf of the Commission for Proclamation,
Diocese of Sivagangai from Arulchandru Nilayam (Faith Resource Development Centre), Brothers of the Sacred Heart, Ulaganathapuram,
Paramakudi - 623 707, Ramnad Dist.
www.arulchandrunilayam.org |Email: arulchandrupmk@gmail.com